செந்தமிழ்

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டு
சிறப்பு மலர்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(நிறுவனர் : வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள்)

ஆசிரியர்: மா. தனுக்கோடி பாண்டியன், பி.ஏ.பி.எல்.

பொறுப்பாசிரியர்: நா.பாலுசாமி, எம்.,பி.எல்.,எம்.லிட்., பிஎச்.டி.

எட்டாம் உலகத்தமிழ் மாநாடு சிறப்புற
எங்களின் நல் வாழ்த்துக்கள்

*செந்தமிழ் மொழி சிறக்க
தீந்தமிழ் அறிஞர்கள்
திரண்டு கூடி,
தஞ்சை மாநகரில்
தரணி புகழ விழா
எடுக்கும் இந்நாளில்,
சுந்தரத் தெலுங்கில்
வாழ்த்துகிறோம்.*

இவண்

திரு. பாபு எம். ஏ.,
மாநிலத் தலைவர்
தமிழ்நாடு நாயுடு
இளைஞர் மன்றம்

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர் உரை

செந்தமிழ் என்னும் இலக்கிய இதழ் மதுரைத் தமிழ்ச்சங்க நிறுவனர் தெய்வத்திரு. பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்களால் தமிழ்ச்சங்கத்தின் வெளியீடாக 1903 இல் தொடங்கப்பெற்றது. மகாவித்துவான் நா. இராகவய்யங்கார், ஆராய்ச்சிப் பேரறிஞர் மு. இராகவய்யங்கார், புலவர்ஏறு ஆராய்ச்சிப் பேரறிஞர் திருநாராயண அய்யங்கார் முதலிய தமிழ் முழுதும் உணர்ந்த தண்டமிழ் ஆசான்கள் இதழ் ஆசிரியர்களாக அமர்ந்து இதனை வளர்த்தார்கள். மகாமகோதபாத்தியாய தாட்சினாத்திய கலாநிதி டாக்டர் உ.வே.சா., நாவலர் நா.மு. வேங்கடசாமி நாட்டார், இலக்கண அரியேறு அரசஞ்சன்முகனார்,நாவலர்கணக்காயர் டாக்டர்ச.சோமசுந்தர பாரதியார், பேரறிஞர் வையாபுரிப்பிள்ளை போன்ற எண்ணற்ற ான்றோர்கள் தத்தம் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிச் செந்தமிழ் இதழைச் செழிக்கச் செய்தார்கள். இந்த வரலாற்று மரபைத் தொடர்ந்து, நூற்றாண்டு விழாவை எட்டி நிற்கும் *செந்தமிழ் இதழ்* இவ்வாண்டு எட்டாம் உலகத்தமிழ் மாநாட்டை முன்னிறுத்திச் சிறந்த ட்டுரைகளுடன் ***செந்தமிழ் சிறப்பு*** இதழாக வெளியிடப் பறுகிறது. மாநாட்டிற்கு வருகை தரும் பன்னாட்டுத் தமிழ் தைகளும் நம்மவரும் படித்து இன்புறும் அளவில் இது வெளியிடப் றுகிறது. தமிழின் உயர்வே தனிக் குறிக்கோளாகக் கொண்டு ளங்கும் மதுரைத் தமிழ் சங்கம் நான்காம் தமிழ் சங்கம் தாடர்ந்து தன் பணியை ஒல்லும் வகையால் நிறைவேற்றிவருகிறது. துபோது காலாண்டு இதழாக வெளிவரும் *செந்தமிழ்* இதழ் (ந)ாடக்க காலத்தில் வெளிவந்தது போன்று *திங்கள் இதழாக* ளிவருவதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ் ர்பர்களும் பொதுமக்களும் மதுரைத் தமிழ் சங்கத்திற்குப் ாதரவுதர வேண்டுகிறேன்.

வளர்க தமிழ் ! வாழ்க தமிழர் !!

ரைத் தமிழ் சங்கம் — மா. தனுக்கோடிபாண்டியன்

2.1994. — ஆசிரியர்.

செந்தமிழ்

முகவுரை

இப்பரதகண்டத்துள்ள பலவாய மொழிகளுட் டொன்று தொட்டே அறம்பொருளின்பம்வீடு எனப்பட்ட நான்கு உறுதிப் பொருள்களையும் அடைதற்கு வாயிலாகவுள்ள எண்ணிறந்த நூற் பெருக்கத்தையுடையன ஆரியமுந் தமிழுமாம். இவை வடக்கண்ணுந் தெற்கண்ணும் வழங்கல் நோக்கி முறையே வடமொழி தென்மொழியெனப் பெயர்பெறும். வடநாட்டு வழங்கும் பல்வகை மொழிக்கும் வடமொழி பிறப்பிடமாகும். அதுபோலத் தென்னாட்டு வழங்கும் வடுகு, கன்னடம், மலையாளம், துளு முதலிய மொழிகட்குந் தென்மொழிபிறப்பிடமாகும். இதனால் இவ்விரு மொழியும் ஈண்டு வழங்கும் மற்றை மொழிகட்கெல்லாம் முற்பட்ட தொன்மையாட்சி உடையனவாம் என்பது நன்று விளங்கும். இவ்விரண்டும் தெய்வத் தோற்ற முடையவாய்த் தெய்வத்தன்மையுடைய இருடிகளால் வளர்க்கப்பட்டன என்பது இவ்விருமொழியாளர்க்குங்கொள்கை. இவற்றுள், தமிழ் சிவபிரான் பாலே தோன்றி அகத்திய முனிவரான் வளர்க்கப்பட்டதெனபர். இதனைக், கல்வியிற் பெரிய கம்பநாடர் "தழ்புரை நிழற்கடவுடந்த தமிழ் தந்தான்" (ஆரணிய காண்டம், அகத்தியப்படலம், சக.) என்று கூறியவாற்றான் உணர்க.

இம்மொழி, "வண்புகழ மூவர் தண்பொழில் வரைப்பி, னாற் பெய ரெல்லை யகத்தவர் வழங்கும் வழியது" (பொருளதிகாரம், செய்யுளில், எகூ) என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாறு சேர, சோழ, பாண்டியரால் ஆளப்பட்ட வேங்கடங்குமரி என்பவற்றிடைக் கிடந்த நிலவுலகில் அவர் பெருங்கொடையானே நல்லிசைப்

புலவர்களாற் பெரிதும் போற்றி வளர்க்கப்பட்டு வந்தது. இம்மூன்று பெருவேந்தரும் இடைக்கட் புகுந்து இந்நாட்டை அடிப்படுத்து ஆண்டவரன்றிப் படைப்புக்காலந் தொட்டே இந்நாட்டின் அரசுரிமை பூண்டார் என்பது செந்தமிழ்ப்பெரியோர் கொள்கை. இதனை, "வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி, பண்பிற்றலைப்பிரிதலின்று," (திருக்குறள், குடிமை, ரு.) என்பதன் உரையில் "பழங்குடி - தொன்று தொட்டு வந்தருடி" எனவும், "தொன்று தொட்டு வருதல் சேல சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" எனவும் ஆசிரியர் பரிமேழலகர் கூறியதனால் அறியப்படும். "கோதாவரி யாற்றையும் மற்றும் எல்லாவற்றையும் காண்பீர்." (கிஷ்கிந்தா காண்டம், சக - ம் ஸர்க்கம், கஉ - ம் சுலோகம்.) எனவும், "பின்பு பொன்னிறைந்ததாயும் அழகுடைத்தாயும் முத்துமணி இவற்றால் அணியப்பட்டதாயும் நகரத்து அரணோடு இணைக்கப்பட்டதாயும் உள்ள பாண்டியர் வாயிற்கதவை, வானரர்கான்? போய்க்காண்பீர்." (ஷை, ஷை, கஅ, ககூ) எனவும் வான்மீகி முனிவரும் கூறுகின்றமையால் இவராண்ட தமிழ் நாட்டின் பழமையும், செல்வநிலையும், மேம்பாடும் நன்று தெளியப்படும்.

இவருட் பாண்டியரே, பல்வேறு காலங்களில் நான்கு வருணத்துப் பல புலவர் பெருமக்களைத் தொகுத்து அவர்க்கு வேண்டுவன புரிந்து தமிழ் வளர்த்த தட் டலைமை வாய்தலால், இவரையே தமிழ்நாடான் எனவும், இவராண ட நாட்டையே செந்தமிழ்நாடு எனவும், இவரது மதுரையைத் "தமிழ்கெழு கூடல்" (புறம், ருஅ.) "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரப ன், மகிழ்நனை மறுகின் மதுரை" (சிறுபாண், சு சு, சுஎ.) "கூடற் கொழுந்தமிழி னொண்டுறை" (இறையனார் களவியலுரை மேற்கொள்.) "கூடலினாய்ந்த வொண்டீந்தமிழ்" (திருக்கோவையார், உய.) "தமிழ்க்கூடல்" (கலிங்கத்துப்பரணி, இராசபாரம்பரியம், ஒநு.) எனவுந் தமிழாற் சிறப்பித்துச் சான்றோர் பலரும் வழங்குவராயினர். ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பிய மரபியலுரைக்கண (கூச)

"மூன்றுவகைச் சங்கத்து நான்கு வருணத்தொடுபட்ட சான்றோரும்" எனக் கூறுதலான், இவ்வரசர் நிறுவிய தமிழ்ச்சங்கம் மூன்றென்பதும், அச்சங்கத்துத் தமிழாராய்ந்த புலவர் நான்கு வருணத்தவருமாயினார் என்பதும் அறியத்தக்கன. அவருள் யாம் அறிந்தவளவிற் காய்சினவழுதி என்னும் பாண்டியனே தமிழ்ப்புலவர்களை ஒழுங்கு சேர்த்துத் தமிழ் வளர்த்தற்கண் முற்பட முயன்றான் என்பது தெரிகின்றது. இவன் வழியிற் பாண்டியரெல்லாம் இந்நன்னெறி கடைப்பிடித்துத் தமிழ் வளர்த்தற்கண ஒருப்பட்டனர். செந்தமிழ் நாடாளும் அரசுரிமையான் மேம்பட்ட இவ்வேந்தர், நல்லிசைப்புலவரை உயிர்த்துணைவராகக் கருதித் தம்மினும் மிக்குமதித்துத், தம் அரசும் கல்வியறிவொழுக்கங்களும் நியாயமும் வீரமும் கொடையும் இவரானே நிலைபெற்று வளர்வனவாகக் கொண்டு இவரைப் போற்றுதற்கண்ணே நின்றனர். தலையாலங்கத்துச் சேர சோழர் என்னும் இருபெரு வேந்தரையும் ஐந்து குறுநிலமன்னரையும் ஒருங்கு போர் வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பான், அப்போர்முகத்து 'இது செய்யேனாயின் இன்னனாவேன்' என்னும் வஞ்சினங் கூறுமிடம்து, "என்னைச் சிறுசொற் சொல்லிய வேந்தரைப் போர்சிதறத் தாக்கி அகப்படுத்தேனாயின் மாங்குடிமருதன் முதலாக நல்லிசைப் புலவர் எனது நிலவெல்லையைப் பாடாது நீங்குக" என்றதொன்றானே இவர்கள் இப்புலவரை எத்துணையாக நன்குமதித்தனர் என்பது அறியலாகும். இதனை:

"ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
வளுலகமொகி நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை"

எனவரும் புறப்பாட்டான் (எஉ) அறிக.

இனிச் சேரரும் சோழரும் சங்கம் நிறுவாவிடினும் இப் பாண்டியரை போன்றே செந்தமிழ் அருமை போற்றி இப்புலவரைப் பெரிதும் ஆதரித்தனர் என்பது அப்புலவர் பலரும்

அவ்வரசரை பாடிய பாடல்கள் நிறைந்த எட்டுத்தொகை முதலிய நூல்களான் நன்கு விளங்கும். இவ்வேந்தரெல்லாந் திருவுடையரேயன்றித் தெள்ளியருமாய்ப் பெருஞ்சுவை பயப்பச் செய்யுள் செய்தலினும் வல்லராயினார் என்பதும் அந்நூலான் உணரப்படும். இம்மூவேந்தரும் நாவிறுடைய புலவர்களையே யாரினும் மீப்பட நன்குமதித்துத், தமக்குள்ளும் பிறர்பாலும் பகைமை விளைந்த போது இவர் உரைத்தவற்றிற்கு இணங்கிப் பகைமை தீர்ந்தும், தீயன ஒழிந்தும், நல்லன புரிந்தும் போந்தார்கள். பொய்கையார் என்னும் புலவர், சோழன் செங்கணான் என்பான் சேரமான் கணைக் காலிரும்பொறையோடு பொருது அவனைப்பற்றிக்கொண்டு சிறை வைத்துழிக் களவழி நாற்பது பாடி வீடு கொண்டார். கோவூர்கிழார் என்னும் அறிஞர், சோழன் குளமுற்றத துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலயமான்மக்களை யானைக்கி:டுவுழிப் பாடி உய்யக்கொண்டார். இவற்றால் இவ்வேந்தர்க்கும் புலவர்க்கும் உள்ள நட்பும், அரசர் பக்கத்துப் புலவர் செல்வாக்கும் தெளியப்படும். புலவர் அவ்வவ்வமயங்களிற் பாடிய பாடல்களையெல்லாம் பெருநூல்களாக தொகுப்பித்து இவ்வுலகிற்குதவியோரும் இத்திருவுடைமன்னரேயாதலால், இவர், தமிழ்வளர்ச்சிக்கண் எத்துணையாக முயன்றனரென்பது அறியத்தக்கது.

இப் பெருவேந்தரைப் போலவே இத்தமிழ்நாட்டுக் குறுநில மன்னரும் வேளிரும் இப்புலவர்பால் அன்பும் அருமையும் பாராட்டி உபசரித்தனர் என்பது, இக்கல்விச செல்வர்கள், அவர்களுள்ளே எழுவரைத் தமிழ்நாட்டுப் பெருவள்ளல்களாக எண்ணினமையானே புலப்படும். இவ்வள்ளல்களை இப்புலவர் மூவேந்தரினும் மீப்பட மதித்து அன்பு பாராட்டினர் என்பது விளங்குகின்றது. இதனை, மூவரும் பாரி என்னும் வள்ளற்றலைவனது மலையாகிய பறம்பினை முற்றிய காலத்துக் கபிலர் என்னும் புலவர் பெருமான் பாடிய பாடல்களாற் செவ்வனம் அறியலாகும். இப்புலவரெல்லாம் இவ்வள்ளல்களது வளர்ச்சிக்கு மகிழ்ந்தும், தளர்ச்சிக்கு வருந்தியும் பேரன்பினால் உள்ளுருகிப் பாடிய பாடல்கள் எண்ணிறந்தனவுள வாதலால் இவர்களாலும் தமிழப் பயிர் வளர்ந்தென்பது ஒருதலை.

பின் பௌத்த ஜைனர்கள், இந்நாட்டுட் புகுந்து இத்தமிழ் அரசரைத் தமராக்கித் தமது சமயக் கொள்கைகளைப் பரவச் செய்த காலத்தும் இத்தமிழ் அவர்பாலும் வளங்குன்றாது சிறந்து வளர்ந்ததென்பது, அவர்கள், நிகண்டுகளாகவும் இலக்கணங்களாகவும் புராணங்களாகவும் காப்பியங்களாகவும் வாதங்களாகவும் செய்துள்ள பல நூல்களான் அறியப்படுகின்றது. பௌத்த ஜைனர் தமிழில் இயற்றிய பெரிய வாத நூல்கள், குண்டல நீல பிங்கல அஞ்சன தரிசன தத்துவ கால கேசிகள் முதலியவை என்ப. (யாப்பருங்கல விருத்தி).

இவர்கட்கு முன்னும், இவர்கள் காலத்தும், சிறிது பின்னும் சைவசமயிகளாகவும் வைணவசமயிகளாகவும் நாயன்மாரும் ஆழ்வாரும் இவ்வுலகின் பெருந்தவப்பயனாகத் தோன்றியருளிஇத்தமிழ் வேந்தரைத் தந்நெறிப்படுத்துத் தமிழ் நாட்டாரை உய்வித்து, மிகவும் இனிய செந்தமிழானே வேதம் ஆகமம் மிருதி இதிகாசம் புராண முதலியவற்றின் நுண்பொருள்கள் எல்லாம் பொலிவுபெறப் பரமஞானவொளியே வீசிப் பக்திச்சுவை மிக்கொழுகி அன்பே வடிவாய்நின்றன எனலாம்படி பல்லாயிரம் பாடல்கள் அருளிச்செய்து செந்தமிழின் தெய்வத்தன்மை புலப்படுத்தினார்கள். இவர்கள் அருளிச்செயல்களேல்லாம், பெரும்பாடியங்கள் அருளி வைதிகசமயம் நிலைபெறுவித்த வடமொழிப் பேராசிரியர்களாற் புகழ்ந்து போற்றப்பட்டன வாயின், இவ்வேதகத்தமிழின் பெருமைகளை யாமே எடுத்துரைக்க வல்லேம்? இந்நாட்டு நான்குவருணத்து நன்மக்களும், இவர்கள் தமிழ்வேதங்களையே தந்நாடெல்லாம் பரவச்செய்து இவற்றையே மந்திரமாகக்கொண்டு சுபாசுபகருமங்களிலும், திருக்கோயில்களிலும் வழங்கி வழிபடலாயினர். இத்திருப்பாடல் அருளியோருள் வேந்தரும் உளரென்பதும், இவரது நற்றமிழாற் புகழ்பெற்ற மன்னர் பலரென்பதும், திருமுறைகளைத் தொகுப்பித்தோரும் அரசர் என்பதும் அறியப்படுதலாற் செந்தமிழ்வேத வளர்ச்சிக்கும் வேந்தர் காரணராயினாரென்பதில் ஐயமில்லை.

இவ்வாறு நந்தமிழ்மொழிவளர்ச்சி குலோத்துங்க

சோழனுக்குப்பின் சில தலைமுறை வரை அரச பரம்பரையினராலும் பெருஞ்செல்வர்களாலும் இடையீடின்றி நிகழ்ந்தது. இம்மூவேந்தருக்குப்பின், இத்தமிழ் ஒழிந்த தேயத்து அரசர்கள் பலர் புகுந்து இத்தமிழ் நாட்டை யடிப்படுத்தியதனால் இத்தமிழ்மொழி இனிது போற்றப்படாதாக, இச்செந்தமிழ்நாடடுப் பெரும் பகுதியை அரசராட்சிபெற்ற சேதுவேசந்தர்களே நம்து தாய்மொழியாகிய நற்றமிழை நன்கு வளர்த்து வந்தார்கள். இவர்கள் முற்காலத்துப் புலவர் பலர்க்கு முற்றூட்டாக எண்ணிறந்த ஊர்களையும், யானை சிவிகை முதலிய வரிசைகளையும் அளித்தமைக்குச் சாஸனங்களும் சான்றுகளும் பலவுள்ளன. இவ்வாறு அளிக்கப்பெற்ற புலவர்களுள் மிதிலைப்பட்டி அழகிய திருசிற்றம்பலக் கவிராயர் முதலாய புலவர் வழித்தோன்றியோர் இன்றும் அவ்வூர்களையும் வரிசைகளையும் உடையர்களாய் விளங்குகின்றார்கள். தெலுங்கு விஜயநகரத்தரசராலும், கன்னடம் மைசூப் அரசராலும் போற்றப்படுதல்போலத், தமிழும், பிற்காலத் தமிழ்வள்ளல்களான சேதுபதிகளானே பெரிதும் போற்றப்பட்டு வந்தது. இவ்வாறே கல்வியறிவொழுக்கங்களான் ஆன்று செல்வத்தினுஞ் சிறந்த சைவாதீனத்தாரும் இத்தமிழ் வளர்த்தற்கண் மேம்பட்டு விளங்கினார்கள் என்பது நன்கறிந்ததாகும். இவருட்டலைமைவாய்ந்தோர் திருவாடுதுறை ஆதினகர்த்தர்களே ஆவார். இவ்வாதினத்து விளைந்த செந்தமிழ் நூல்கள் அளவில்லை. இவர் செந்தமிழ்ப்பயிர் வளர்த்தலை நன்குதேர்ந்த சேதுமன்னர்கள், இவர்கட்கும் எத்துணையோ ஊர்களை முற்றூட்டாக முற்காலத்தே உதவியுள்ளார்கள். இந்நன்றியினைப் பாராட்டிக் "காவேரிநீரும் சேதுப்திகள் அன்னமும் ஆவுடையப்பபிள்ளை நிழலும்" தாமுடையனவாக அவ்வாதீனத்தார் இன்றைக்கும் வழங்குதலானே அஃதறியப்படும். இத்துணையுங் கூறியவாற்றாற் றமிழ்மக்கள் பெரும்பான்மையாக அரசர்களாலும் பெருஞ்செல்வர்களாலும் நன்று வளர்க்கப்பட்டு வந்தனவென்பது அறியலாகும்.

இவ்வாறு செழித்தோங்கிய நம் தாய்மொழி, இக் காலத்துத் தன்னை வளர்த்தற்குரிய தமிழரசர்களும் தமிழ்

செல்வர்களும் அருகினமையாற் போற்றப்படாது நாளும் மறைந்து வருகின்றமை நாம் அறிந்ததே. ஊக்கம் அளித்து உதவுவோரின்மையான் இதனைக் கற்போரும் கற்றற்குக் காமுறுவோரும் மிகச் சிலராயினர். வழக்கின் கண்ணும் எத்துணையோ வேற்றுமொழிகட்கு இடையிடையே தமிழும் வழங்கப்படுவனவன்றி மற்றன்று. அவைதாமும் பண்டையுருமாறிஎவ்வளவோ திரிபுடையவாகின்றன. வழக்கத் தமிழே இத்தளர்நிலை எய்திற்றாயின் செய்யுட்டமிழின் கதி யென்னாம்? புலவர் வழித்தோன்றியோரும் தமிழினை முற்றமறத்தலான், அவர் தம் முன்னோர் அருநிதியம் எனத்தொகுத்த செந்தமிழ் முறைகளை இடருறுத்தஞ் செத்தை என மதித் து ஆற்றிவிடுவாராயினார். இங்ஙனம் நாளும் நீர்வாய்ப்புகும் ஏடுகள் எண்ணிறந்தன. மற் றுஞ்சில சிதலுந் தீயும் உண்ணக் கவலையின்றி விடப்படுவன. இவற்றாற் கேடுறாது எஞ்சியவற்றுட் சிலவற்றைப் பல்வழியாணும் முயன்று தேடித் தமிழ்வளர்ச்சி ஒன்றே கருதி ஆராய்ந்து, பல குறிப்புக்களுடன் தெளிவுபட அச்சிட்டு வெளிப்படுத்தியும், அவற்றைப் பெற்று உற்றுநோக் குவோர் சிலரேயாயின், அவ்வேடுகளைத் தொகுத்து ஆராய்வோர் எத்துணையராவர் என்பது சொல்ல வேண் டுவதன்று. இக்காலத்துப் பொருள்வருவாய்க்கு உரிய கல்விகள் இத்தமிழ்க்கண்ணன்றி ஆங்கிலமொழிக் கண்ணே உளவாயினமையான், நந்தமிழ், கல்வியின்பம் ஒன்றே கருதிக் கற்கப்படுவதாயிற் று. ஜீவனோபாயங்கேட்க முட்டுப்பாடு பெரிதுமுடைய இக்காலத்து இன்பமே பயனாகக் கல்விகற்பார் மிகச்சிலர் என்பது உண்மையாதலின் இக்கல்வியின் பண்டைநிலை தளர்வுற்றது. நமது ஆங்கிலவரசாட்சியார், தமது மொழியைப் பெரும்பாண்மையாகவும், தமிழ் மொழியை சிறுபாண்மையாகவுமே இந்நாட் டுக் கலாசாலைகளிற் பயில்விப்பது, பிறமொழியை இடைவிடாது பயிறலானே தாய்மொழியை முற்றும் மறவாமையாகிய அத்துணை நன்மையை மாணாக்கரளவிற் பயப்பதன்றி வேறன்று. (அந்நன்மையும் இனியுளதாவதோ அன்றோ தெரியோம்.)

இத்தளர்நிலையின்றும் நம் தாய்மொழியை வளர்

நிலையில் நிறுவும் வள்ளல்கள் யாவரேனும் உளராகர்ரா என்று தமிழுலகம் அலாவுகின்ற இக்காலத்துத், தமிழறிஞர்க்குப் பெரும் பொருளுதவிச் செந்தமிழ்ப் பெருநூல்கள் வெளியிடுவித்து மதிநுட்பநூலோடுடைய புலவர் குழாத்துள் வீற்றிருந்து தமிழாராய்தலையே பேரின்பமாக கருதியோரும், நாடெல்லாம் புகழ்பெற்ற ராஜ்யதந்திர மகாநிபுணருமாகிய இராமநாதபுரம் ஸ்ரீமாந் - பொன்னுச்சாமித் தேவர் அவர்கள் அருமைப் புதல்வரும், தந்தந்தையார் நல்லொழுக்கம் போற்றி அத்தமிழராய்ச்சியிலும் அதனின் வளர்ச்சியினும் நாளும் முயலும் அருங்கலைவினோதரும், பாலவநத்தம் ஜமீந்தாருமாகிய ஸ்ரீமாந் - பாண்டித்துரை தேவர் அவர்கள், சென்னை மாகாணக் கூட்டம் இம்மதுரை மாநகரிற் கூடிய காலத்து அறிஞர் பலரையும் ஒருங்கு கூட்டி ஓர் பேரவை தொகுத்து, எவ்வாற்றாற் றமிழ் வளர்ச்சிபுரியலாகும் என ஆராய்ந்தார்கள். அவ்வவையுள், தமிழ்க் கலாசாலை உளவாக்குதலாம், இறவாதுள்ள தமிழேடுகள் பலவற்றையும் அச்சிட்ட தமிழ் நூல்கள் அனைத்தையும் தேடிப்பெற்றுப் பிறர்க்குப் பயன்படுமாறு ஒருவழித் தொகுத்துவைத்தலானும், வெளிவராத அரிய தமிழ் நூல்களைப் பரிசோதித்து அச்சிட்டுப் பரவச் செய்தலானும் வடமொழி ஆங்கிலம் முதலிய பிறபாடைக்கண்ணுள்ள அரிய நூல்களைத் தமிழின் மொழிபெயர்த்துப் பதிப்பித்தலானும் தமிழ்க் கல்வியெபற்றிய பத்திரிக்கை வெளியிடலானும், தமிழிற் பரீக்ஷை பல வைத்து உயர்தரத்தே தேறியோர்க்குப் பட்டம் பரிசு முதலிய அளித்தலானும், தமிழறிஞரான் உபந்நியாஸங்கள் புரிவித்தலானும், இக்காலைத் தமிழறிவு மிக்கார் பலரையும் ஒருங்கு கூட்டித் தமிழராய்தலானும், வேண்டும் நூல் உரை முதலியன செய்வித்தலானும், பிறர் செய்த நூல் உரை முதலியவற்றை அரங்கேற்றுவித்தலானும், தமிழினை வளர்தலாகும் எனத் தேர்ந்து, முற்காலத்துத் தமிழ் விளைந்த நிலமாகிய இம்மதுரை மாநகரையே இவையெல்லாம் நிகழ்த்துதற்குரிய தலைமையிடனாக்கி 'மதுரை தமிழ்ச்சங்கம்' எனப் பெயர்தந்து ஓர் தமிழ்க்கழகம் நிலைபெறுவித்துத் தமிழ் வளர்த்தற்கு முயல்வராயினர்.

இவ்வமையத்துத், தமிழ் வளர்த்தலையே தம் குல

ஒழுக்கமாகக் கொண்ட பெருவள்ளலும், நுண்ணறிவாணும் பெருங்கல்வியாணும் மேம்பட்டு அறிஞர் பலராற் பெரிது புகழப்பெற்ற செந்தமிழ் வேந்தருமான இராமநாதபுரம் ஸமஸ்தானம் மாட்சிபொருந்திய ஸ்ரீமத் விஜயரகுநாத் பாஸ்கர சேதுபதி மகாராஜரவர்கள், தாம் செய்தற்குரிய பேரறங்களுட் டலைமையான இச்செந்தமிழ் பரிபாலனம் நிலைபெறுதற்கு உரியகாலம் வாய்த்தென்று பெருமகிழ்ச்சியுடையராய் முன்வந்து, இச்சங்கம் பெரும்பான்மையும் நன்னிலையில் நடைபெறுமாறு வேண்டும் பொருளுதவிபுரிந்து, அவ்வுதவி என்றும் நிகழுமாறு தக்கசாஸனமும் அளித்தார்கள். இவ்வேந்தர் பெருநன்றி, இத்தமிழுலகம் என்றும் பாராட்டற்பாலது. இத்தமிழ் சங்கத்து அக்கிராசனாதிபதியவர்களாகிய ஸ்ரீமாந் - பாண்டித்துரைத் தேவரவர்கள் இப்பேருதவிபெற்றும், தாமே வேண்டுவன உதவியும், பிறரை உதவுவித்தும், இச்சங்கம் பொருளாற் குறையுறாவாறு முயன்று வருகின்றார்கள்.

மேற்கூறியவாறே, இத்தமிழ்ச் சங்கத்தின் அங்கங்களாகச் 'சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை' என்னும் பெயரான் உண்டீ உடை முதலிய வளித்து மாணாக்கர்க்குச் செந்தமிழ்க் கல்வி பயிற்றும் கல்லூரியும், 'பாண்டியன் புத்தகசாலை' என்னும் பெயராற் பல்லோர்க்கும் பயன்படும் பெரிய நூனிலையமும், நூல் பத்திரிக்கை முதலியன எளிதின் வெள்ரியிடதற்குச் சாதனமாய்த் 'தமிழ்ச்சங்க முத்திராசாலை' என்னும் பெயரான் ஓர் பெரிய அச்சுக்கூடமும் உளவாக்கப் பெற்றன. இவையன்றி, இத்தமிழ்நாட்டு அறிஞர் பலரை வித்வத் அங்கத்தினராக வேண்டி, இச்சங்கத்திற்கு கல்வியான் உதவற்கண் அவர் உடன்பாட்டோடு ஓர் 'கல்விக்கழகமும்' கூட்டப்பெறுகின்றது. தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன ஆராய்தற்பொருட்டு இவ்வவையார் ஆண்டுதோறும் இம்மதுரையில் ஒருங்கு சேர்வர். இவருட் பெரும்பாலார் ஒருங்கு சூழ்ந்தவற்றையே இச்சங்கம் முற்பட நிகழ்ந்தற்கு ஒருப்படும். தமிழ்ப்பரீக்ஷைகள், ஆங்கிலகலாசாலை மாணாக்கர்க்குத் தமிழில் ஊக்கமளித்தற்பொருட்டு அவர்கற்கின்ற சர்வகலாசாலைத் தமிழ்பாடங்களிலே ஆண்டுதோறும் நிகழ்த்துதல் கருதி, இச்சங்கத்தாரால் இவ்வருஷமுதலாகாதத்

தொடங்கப்பெறுகின்றன. அச்சிடாத செந்தமிழ் நூல்கள் தேடிவருதற் பொருட்டுத் தமிழறிவுடையார் பலரை இந்நாட்டுப் பலஊர்கட்கு செலவிடுத்து அவர் நன்முயற்சியாற் கிடைத்தவெல்லாம் ஒருவழித்தொகுக்கப்பட்டு நல்ல காகிதப்புத்தகங்களிற் பிரதிகள் செய்யப் பெறுகின்றன அச்சிடாத பழைய தமிழ் நூல்களுள் அகநானூறும், மாறனலங்காரமும் அச்சிட்டருகியவற்றுள்யாப்பருங்கலக்காரிகையும் தண்டியலங்காரமும் உரையுடன் இச்சங்கத்தின்ன்றும் இப்போதுஅச்சிட்டு வெளியிடுவதற்குரிய நூல்களாகத் தெரியப்பெற்றுப் பரிசோதிக்கப்படுகின்றன. இவற்றால் இச்சங்கம் தமிழ்வளர்ச்சிக்கட் பல்லாற்றானும் முயறல் நன்கறியப்படும். இன்னும், இச்சங்கத்தைப் பற்றி அறியவேண்டுவனயாவும் இச்சங்கத்தின்றும் வெளிவரும் அறிக்கைப்பத்திரத தான் இனிது விளங்கலாகும்.

மேல், இச்சங்கத்தினினும் வெளியிடுவதாகக் குறித்த பத்திரிக்கை, வேண்டுங்கருவிகள் எல்லாம் முற்றப்பெற்ற ஓர் அச்சியந்திரசாலை இச்சங்கத்திற்கு உரித்தாகச் செவ்விதின் அமைக்கப்பெறும் அளவும் தொடக்கம்பெறாது நின்றது. இப்போது அது முற்றப்பெற்றமையான், இனி இதுமுதலாக, மாதந்தோறும் தவறாமல் வெளிவரும். இஃது தமிழின் செம்மையினையே உலகிற்கு நன்கறிவுறுத்தலானும், செந்தமிழ் வளர்ச்சியே செய்தலானும், செவ்விதாய தமிழானே நடத்தலானும், செந்தமிழ்நாட்டுத் தலைநகர்க்கண்ணே தோற்றமுடையதாகலானும் 'செந்தமிழ்' எனபேர்பெற்று விளங்கும். இது செந்தமிழ் வளர்ச்சி ஒன்றே கருதி வெளியிடப்படுதலான் அவ்வளர்ச்சியினை அவாவும் அறிஞர் நம் செந்தமிழை நன்கு போற்றி வேண்டும் உதவி புரிவரென எதிர் நோக்குகின்றோம்.

இச்சங்கத்தின் நன்னோக்கமெல்லாம் இனிது நிறைவேறுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிக

பத்திராசிரியர்..

வாழ்க தமிழ் ! வளர்க தமிழ் !!

அன்னைத் தமிழுக்கு ஆக்கம்
சேர்க்க தஞ்சைத் தரணியில்
8ம் உலகத் தமிழ்
மாநாடு சிறப்புற எங்களது
வாழ்த்துக்கள்.

அறுசுவை உணவிற்குச் சிறந்த இடம்

ஓட்டல் நியூ கற்பகம்
நீதிமன்றம் எதிரில்
மதுரை - 20.

செந்தமிழே உயிரே நறுந்தேனே
செயலினை மூச்சினை
உனக்களித்தேனே.

-- பாரதிதாசன்.

தமிழ் திளைக்க
தமிழ் சிறக்க

எனது உளமார்ந்த வாழ்த்துக்கள்

-- வசந்தவேல்

கே. வசந்தவேல்,
நவரத்தினபுரம்,
மூன்றாவது தெரு,
காமராஜர் சாலை,
மதுரை 9.

வானநூல் வல்ல தமிழர்

பேரறிஞர் எஸ். சௌந்தரபாண்டியன்

தமிழர்கள் இன்று நாடோறும் பயன்படுத்தி வரும் நாள், வாரம், நட்சத்திரம், இராசி முதலியவற்றின் பெயர்கள் யாவும் வடமொழிப் பெயர்கள் என்றும், தமிழர்கள் வடநூல்களிலிருந்து கற்றுக்கொண்டார்கள் என்றும் கூறி வருகிறார்கள்.

முற்றிலும் தவறானது இது.

தமிழர்கள் நாகரிகம் தொன்மையானது ஆதலாலும், வேளாண்மையிலும், போரிலும் ஈடுபட்ட காரணத்தாலும், தமிழர்களுக்கு வானநூல் அறிவு அமைய வாய்ப்பேற்பட்டது. தமிழர்கள் அறிந்த வானநூல் அறிவே இந்தியாவின் பல பாகங்களுக்கும் சென்று, ஆங்காங்கே வெவ்வேறு மொழிகளில் நூல் வடிவம் பெற்றது.

இதற்கெல்லாம் என்ன சான்று?

'சோதிடம்' என்று கூறப்படும் நூலில் உள்ள அறிவியல் கருத்துக் களை ஆய்ந்தால், அவைகளெல்லாம் தூய தமிழிலேயே சொல்லப்பட்டுள்ளதாகப் புலனாகிறது.

தூய தமிழில் சொல்லப்பட்ட தமிழரின் வானநூல் அறிவுதான், சிறிது வடமொழிப்படுத்தப்பட்டு வேற்று மொழி அறிவு என்பது போல ஆனது!

ஈண்டுச் சில எடுத்துக்காட்டுகளை மட்டும் பார்ப்போம்.

1) 'வருடம்' என்ற சொல், 'வர்ஷம்' என்ற வடமொழியிலிருந்து வந்ததாகப் பலரும் கூறுகின்றனர்.

உண்மை அதுவன்று.

ஒரு மழைக்காலத்திற்கும் அடுத்த மழைக்காலத்திற்கும் இடையே உள்ள கால அளவைத்தான் பழந் தமிழர் 'ஒரு வருடம்' என்று அழைத்தனர்.

வருடம், தமிழ் சொல்லே: 'வர்ஷம்' என்ற வடசொல்லிலிருந்து வந்தது அன்று.

மேலே இருந்து வருவதால் (கொட்டுவதால்) அது, மழை "வருசம்' எனப்பட்டது; அதை வருடம் எனவும் கூறலாம். மழைக் கடவுள் 'வருணன்' எனப்பட்டான்; கருத்துக்களைக் கொட்டுவதால் அது 'வருணனை' எனப்படுகிறது. இதனால், 'வரு' எனும் பகுதி தமிழ் மொழிக்கே உரிய பகுதிச் சொல் என்பது புலனாகிறதல்லவா?

2) கரிநாள் என்று சோதிடர் கூறுவர்; 'அசுப நாள்' என்று வடமொழியில் கூறுவதைத்தான் தமிழர் கரிநாள் என்று கூறுகிறார்கள் என்பது தவறான கருத்து.

கரிநாள் என்பது த்மிழரின் வானநூல் அறிவே.

அரசினர் கீழ்திசைச் சுவடிகள் நூலகத்தில் 'கரிநாள் விளக்கம்' என்றே ஓர் ஓலைச் சுவடி உள்ளது. இச்சுவடியில். ஒரு திங்களில் இன்னின்ன நாட்கள் கரிநாட்கள் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதைத்தான் பஞ்சாங்கத்திலும் போட்டுள்ளனர். இக்கட்டுரை ஆசிரியர், இரவு நேரத்தில், வானத்தை நோக்கிப் பல மாதங்கள் செய்த ஆராய்ச்சியால் தெரிய வந்தது யாதெனில், பஞ்சாங்கத்தில் போடப்பட்டுள்ள குறிப்பிட்ட அக் கரி நாட்களில், வானமும் கரி பூசப்பட்டது போல இருக்கிறது. இதை உள்நோக்கிய தமிழர்கள் தாம்,

இன்னின்ன நாட்களில் 'கரிநாள்' என்று குறித்தனர். கரியாக - கறுப்பாக - இருப்பதால், அந்நாள் கரிநாள். அஃதாவது, அன்று கரிநாள் என்றால, அன்று இரவு வானத்தில், இரவு 7 மணியிலிருந்து, கரிபூசப்பட்டது போலக் காணப்படும் என்பது பொருள். இக் கட்டுரை ஆசிரியர் வானைத்தைப் பார்த்துக் குறித்த கரிநாட்கள்:

28.4.1994	--	வியாழக்கிழமை
30.5.1994	--	திங்கட்கிழமை
20.6.1994	--	திங்கட்கிழமை
05.8.1994	--	வெள்ளிக்கிழமை
25.8.1994	--	வியாழக்கிழமை

இவையனைத்தும் பஞ்சாங்கத்தை ஒப்பிட்டுப் பார்த்தாலும் கரிநாட்கள் என்று குறிக்கப்பட்ட நாட்களாகவே இருந்தன என்பது அறியத் தக்கது.

'கரி' என்ற சொல் தமிழ்தான? எனவே. 'கரிநாள்' என்பதும் தமிழர் அறிவாக இருக்க வேண்டும் அல்லவா? 'அசுபநாள்' என்பதன் மொழி பெயர்ப்பாக ஏன் இருக்க வேண்டும்? கரி என்பது சுபம் அல்லாத தன்மையை குறிக்க எழுந்த சொல் அல்லவே! உண்மையிலேயே கறுப்பாக இருக்கும் பண்பைக் குறிக்க வந்தது அல்லவா?

3) மிதுன மாதத்தில் (ஆனி மாதமே மிதுன மாதம் எனப்படும்). ஞாயிறு (சூரியன்).மிதுன ராசியில உதயமாகி. மிதுன ராசியில் மறையும்.

வானத்தில், இருக்க வேண்டிய இந்த இராசிகள் எல்லாம் நிலத்தில் இருந்து பார்ப்போர்க்குத் தெற்றென விளங்கும் என இயலாது. பலநாட்கள் வானத்தை உற்று நோக்கி ஆய்ந்தால். அவ்வப்போது சில இராசி மண்டலங்கள் (Constellations) கண்ணுக்குப் புலனாகும்.

இவ்வாறு தெரிந்த இராசி மண்டலங்களைத் தமிழர் ஓலைச் சுவடியில் குறித்து வைத்துத்தான் வானநூலை இந்த அளவுக்கு உலகுக்கு அளித்துள்ளனர்.

பன்னிரண்டு இராசிகளின் பெயர்களும் தமிழ்ப் பெயர்களே.

'மிதுனம்' என்பது. தமிழ்ச் சொல்லே.

மிதுன இராசியை. இரு சிறுவர்கள் நிற்பது போலப் போட்டுக் காட்டுவார்கள். வானத்தில் இப்படி உருவங்களைக் காண இயலாது.

மிதுன இராசி வானத்தில் தோன்றும் நாளில் ஆய்ந்தால். உருக்கள்.இரு வளை கோடுகளாக தென்படும்.

மிதித்தல்	--	புணர்த்தல்; ஆடு மிதித்தது என்பர்
மிதி	--	மிதினம்
மிதினம்	--	மிதுனம்

மிதுனம் என்பதே பிற்காலத்தில். 'மைதுனம்' ஆனது.

எனவே. 'மிதுனம்' தமிழ்ச் சொல்லே என்பதும் மிதுன இராசியைக் கண்டு உலகுக்குச் சொன்னவர்கள் தமிழர்களே என்பதும் அறியக் கிடக்கிறது.

இத் திசையில் ஆய்வுகள் பெருகி.த் தமிழர்தம் வானநூல் அறிவு பறைசாற்றப்பட வேண்டும்!

With Best Compliments from

✆ 480924

Golden tailors A/C.

MASTER OF SUITS.

36, American College Buildings
Goripalayam
MADURAI 625 002

GOLDEN JUNIORS

SAKTHI (Ladies & Kids)

With Best Compliments from

© Off : 25338 Res :25318

V.M. NARAYANA NADAR & SONS
"GLASS PALACE"

Dealers : PLAIN FIGURED, WIRED, FROSTED, COOLEX & TINTED.

Mirrors : FOR DRESSING TABES, BATH ROOM CABI NETS, ALL TYPE OF MIRRORS & CGL FLOAT GLASS.
BOOTH ROOM FANCY FITTINGS.

Specialist s in **IMPORTED MIRRORS & TINTED GLASSES**

37, Amman Sannathi
Madurai 625 001

திருமுருகப்பாவை - ஓர் அறிமுகம்.

பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை.

பக்திப் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இலக்கிய வகைகளுள் ஒன்று பாவை இலக்கிய வகை ஆகும். இளம் பெண்கள் வைகறையில் துயில் நீங்கி. தம்மையொத்த இளம் பெண்களையும் துயில் எழுப்பி. இறைவன் புகழ் பாடிக்கொண்டு, பொய்கையில் நீராடி, இறைவனிடம் வேண்டி, நோன்பிருத்தலாக அமையும் இலக்கிய வகையே பாவை இலக்கிய வகை எனப் பொதுவாகக் கூறலாம். இவ்வகையில். சைவ. வைணவ. சமணச் சான்றோர்கள பாவைப் பாடல்களை இயற்றியுள்ளனர். இவண். 'திருமுருகப் பாவை' குறித்துக் காண்போம்.

1. திருமுருகப்பாவை

திருமுருகப்பாவை என்ற நூல் மு.பக்தவத்சலம் என்பவரால் இயற்றப்பெற்று, பதிப்பிக்கவும் பெற்றுள்ளது. வெண்டளையால் வந்த எட்டடி நாற்சீர் ஒரு விகற்பக் கொச்சக் கலிப்பாவாலாகிய முப்பது பாடல்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் "ஏலோரெம்பாவாய்" என்ற தொடர் இடம் பெறுகின்றது. ஒவ்வொரு பாடலையும் இசையுடன் பாடி மகிழ்வதற்கேற்ப இராகம். தாளம் என்பன கொடுக் கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் தலைப்பும் கொடுக்கப் பட்டுள்ளது. இனி. நூலுட் காணப்படும் செய்திகளைச் சுட்டலாம்.

2. தோழியர்களை அழைத்தல்

இளம் பெண்கள் மார்கழி நீராடுவதற்குத் தம்மையொத்த பெண்களை - தூங்கும் பெண்களை - அழைக்கும்

மரபைப் பாவை இலக்கியத்தில் காணலாம். இவ்வகையில் இந்நூலிலும் இளம் பெண்கள் தம் தோழியரை,

"சேலன்ன கண்மடவாய் செவ்வாய்ச் சிறுமருங்குல்
பாலன்ன தீஞ்சொற் பாவாய்"(2 : 1 - 2)

"சேலைப் பழித்தவிழிச் செந்தேன் மொழிப்பாவாய்"(16:17)

"காவடிப் பூங்கோதைக் காமர்த் திருநுதலாய்
உள்ளம் நெகிழ்த்துருகு மோஙங் குபே ரன்புடையாய்
கள்ளத் துயில்கொள்ளுங் காதல்மொழிப்பாவாய்"
(17 : 4 - 6)

"செந்தாம ரைமலர்மேல் திருவனையாய்
இந்தாமெ ழில்நுதலாய்" (18 : 4 - 5)

"துத்திவிரி சுணங்கின் தூமென் மடப்பாவாய்
சித்தத் தெளிவுடையாய்" (21 : 6 - 7)

என்றெல்லாம் அழைக்கின்றனர்.

3. பொழுது புலர்ந்தமைக்கான அறிகுறிகள்

தூங்கும் பெண்களிடம் பொழுது புலர்ந்தமைக்கான அறிகுறிகளைக் கூறித் துயில் எழுப்புகின்றனர். சோலைகளில் குயிலின் பாட்டொலி கேட்டல், சோலைகளில்பூத்தபுதுமலர்களில் தேனைப்பருகிய வண்டுகள் பாடுதல், திருப்பரங்குன்றத்துக் கோயிலிலுள்ள சங்குகள் முழங்குதல்(16). கோழிகள் பன்முறை கூவுதல் (18 : 7) என்பன சுட்டப்படுகின்றன.

4. நீராடுதற்குரிய பொழுது

மார்கழி மாதத்து நிலவொளியுடன் கூடிய வைகறைக் குளிர் மார்கழி நீராட ஏற்றபொழுதெனக் காட்டப்படுகிறது.(1 : 5. 13 : 7 - 8).

5. பாவை நோன்பின் சிறப்பு

"மடவார் மகிழ்ந்தேற்கு மண்பாவை நோன்பு"(4:2)
"மாதர் தொழும் பாவை" (13 : 7)
எனப் பாவை நோன்பின் சிறப்பு மொழியப்படுகிறது.

6. நோன்பு மேற்கொள்ளும் விதம்

பாவை நோன்பை எவ்வெவ்வாறு மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடும்போது, வைகறையில் எழுந்து நீராடல். பால். நறுநெய் முதலியன சேர்த்த உணவு உண்ணாமை, வெறுஞ்சோறு உண்ணல். கண்களில் மை எழுதாமை. கூந்தலில் பூச் சூடாமை. நலம் விளையப் பண்ணும் மனத் திண்மையுடையராய்த் திகழ்தல். ஆன்மநேய ஒருமைப்பாடு கொள்ளுதல். அடல் சினம் ஆற்றுதல், அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கையும் அகற்றல். செம்மைகொள் மனத் தூய்மையே அறமெனக் கொள்ளல் என்பன சுட்டப் பெறுகின்றன (384). இதனால். பாவை நோன்பு என்பது ஆன்ம உறுதியளிக்கும் செயலாக மட்டுமன்றி. உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆக்கம் சேர்க்கும் செயலாகவும் திகழ்தல் புலனாகிறது.

7. பாவை நோன்பிற்குரிய தெய்வம்

இந்நூலின் பெரும் பகுதி முருகப் பெருமானின் பெருமைகளையே இயம்புகின்றதெனினும். பாவை நோன்புக்குரிய தெய்வம் என்ற நிலையில். நாங்கள் விரும்பி மேற்கொண்ட பாவை நோன்புக்குரிய கடவுளான அன்னை

மனோன்மணி (26 : 4) என்றும். நாம் சேர்ந்து உடன்பட்டு மேற்கொண்ட மார்கழி நீராட்டமெனும் பாவை நோன்பினை ஏற்று பயன் ஊட்டுதற்குரியவள் கார்த்தியாயனி எனும் அருட்செம்பாவை (29) என்றும் குறிப்பிடப்படுதல் இவண் சுட்டுதற்குரியதாகும்.

8. முருகப் பெருமான் புகழ் பாடுதல்

"திருமுருகப்பாவை" என்னும் நூற்பெயர்க்கேற்ப ஆசிரியர் முருகப் பெருமானின் புகழ்களை ஏற்ற இடங்களில் எல்லாம் வியந்து போற்றுகின்றார்.

8.1. உறவு முறைகளைக் கூறுதல்

முருகப் பெருமான் சிவபெருமானின் மைந்தன் (1:3, 14:3), மனோன்மணியின் மைந்தன் (21:4 - 5), மந்தாகினியின் செல்வ மைந்தன் (18:3), கார்த்திகையின் மைந்தன் (12:2), விநாயகனின் தம்பி (1: 1 - 2) என உறவுமுறைகளைக் கூறி மகிழ்கின்றார்.

8.2 பெயர்கள்

ஆறுமுகத்தண்ணல் (6:4), ஆறுமுகத்தம்மாள் (2:3), கடம்பன் (19:3), கந்தப்பெருமாள் (12:2), கந்தன் (19:5), குமரன் (27:7 , 30:5), குருநாதன் (12:4), சண்முகத் தேசிகன் (12:1), செவ்வேள் (10:1 , 12:3) , 29:3) , சேயோய் (22:4), தமிழ்குமரன் (19:4), தேவசேனாபதி (24:1), நம்பி (24:1), முருகசிவம் (1:61), முருகப்பெருமாள் (28:2), முருகப்பெரியோன் (28:2), முருகன் (5:5 , 14:8), வேலன் (2:4 , 8:4), வேள் (16:3) என்ற பெயர்களில் முருகப் பெருமான் சுட்டப்படுகின்றார்.

8.3 முருகப் பெருமானுடன் தொடர்புடையன

முருகப் பெருமானுடன் தொடர்புடைய மயில் (4:1, 8:4, 9:7, 15:7, 16:3, 19:3, 24:6), மலை (4:1, 5:4, 6:5, 11:5, 15:5-6, 20:4, 21:5, 22:5), வேல் (4:7, 20:7, 22:6), படைவீடுகள் (10:19), கொடி (16:3), மாலை (17:9) என்பனவற்றில் பெருமைகள் பேசப்படுகின்றன.

8.4 முருகப் பெருமானின் பெருமைகள்

சூரனை வென்றவன் (4:7, 6:6, 14:5, 20:6, 22:5), தஞ்சமென வருவோர்க்கெல்லாம தண் கருணை செய்பவன் (5:5), ஈறும் முதலும் இல்லாதவன் (6:7), உயிர்க்குயிரானவன், உணர்ந்து காணும் ஒளியானவன் (11:6), சந்தத் தமிழை மணந்தவன், பாசத்தொடரைத் தூளாக்குபவன், சாமிக்கு உபதேசம் செய்தவன், வேதமுடிவில் விளையும் பயனானவன், நாத முடிவில் செழித்தோங்கும் தனிக் கருணைப் பேரொளியானவன், முடிவற்ற நிலையில் இருப்பவன் (12), சிவபெருமானுக்கு வேதப்பொருள் உரைத்தவன் (13:1), உள்ளமெனும் கோயில் உவந்தேத்தும் உத்தமன் (17:1), தமிழிருக்கும் இடந்தொறும் தங்கி வாழும் தமிழவேள் (19:4), கிரவுஞ்சம் அழித்தவன் (20:2), ஆயிரம் கண்கொண்டு காணிலும் காண இயலாத பேரழகுடையவன், பண் ஆயிரத்தாலும் பாடி விவரிக்க இயலாத பெரும்புகழ் உடையவன், மண் முதல் விண் ஈறாகவும், அதற்கப்பாலும விரிந்து அருட்பெருஞ்சுடரானவன், கண்ணிடையே பொருத்திக் காண்பதற்குரியவன் (23), அன்னை போல் தயவுடையவன், இனிக்கும் இன்பமானவன் (26), தமிழ்ச் சங்கத் தலைமைப் பாவலன் (30:4) என முருகப் பெருமானின் வீரம், கருணை, தமிழுடன் உள்ள தொடர்பு, இயல்பு, அழகு முதலான பெருமைகளை ஆசிரியர் உன்னி உன்னிப் புகழ்ந்து பாடுகிறார்.

9. பயன்கூறல்

இந்நூலில் இடம் பெறும் பயன் கூறும் பகுதிகளை இரு நிலைகளில் காணலாம்.

1. இறைவனைப் போற்றுவதால் விளையும் பயன்கள்.
2. பாவை நோன்பு நோற்றலின் பயன்கள்.

தம் தோழியரைத் துயில் எழுப்பும் பெண்கள் முருகப் பெருமானைப் போற்றி வணங்கினால் அவன் பாவை நோன்புக்குத் தேவையான பொருட்கள் அளிப்பான் (1:6 - 7) என்றும், மனநிறைவுற்று வாழ்வு நலமும், எக்காலமும் அகலாத அருட் செல்வத்தையும், பொருட் செல்வத்தையும் அளிப்பான்(5:6-8) என்றும், அவன் கருணை நம்மைக் காத்தருள முந்தும் (12:8) என்றும், காளியை வணங்கினால் பாவை நோன்புக்குத் தேவையான பொருள்களை அளித்து, உற்ற துணையாவாள் (2:4) என்றும் பயன் கூறுகின்றார்.

பாவை நோன்பு நோற்றலின் பயன்களாகக் காடு, மலை, வயல் வளங்கள் பெருகுதல், சன்மார்க்க கணவனை அடைதல், அவர்கள் சூடும் மணமாலை தூய இன்பம் விளைவித்தல் (8) என்பன கூறப்படுகின்றது. இவற்றுள் தன்னலம் மட்டுமன்றி, பொதுநலமும் அடங்கியிருத்தல் சுட்டுக்குரியதாகும்.

10. வேண்டுதல்

பாவை நோன்பு மேற்கொள்ளும் பெண்கள் பின்வருவனவற்றை வேண்டுகின்றமை காட்டப்படுகின்றது.

10.1. மழை வேண்டுதல்.

"அங்கிமதி யுற்றே அருங்கதிருந் தியாகிப்
பொங்குங் கதிர்த்திங்கள் போற்றும் அமுதநிலை
பொங்கி பொலியுமருட் பேரின்ப வெள்ளமென
எங்கும் அறஞ்சிறக்க ஏற்றபே ரின்பமெலாந்
தங்கச் சிலைகுலாவித் தாழா திடித்துமின்னி
இங்கிதந் தானுடையாய் ஏற்றபெரு மாமழையே
தங்கியாம் வாழத் தயவாய் புதுவெள்ளந்
தங்கிப் பெருகிவளந்தழைத்தேலோ
ரெம்பாவாய்"(7)

என மழை பொழிய வேண்டுகின்றனர்

10.2. முருகன் அருள் வேண்டல்

முருகப் பெருமானிடம் பேராதரங்கொண்ட பெருங் கருணையால் எங்கள் முன்னே தோன்றி, சீர் மிக்கதும் நாங்கள் பெற வேண்டுவதுமாகிய நன்மைகளைத் தேர்ந்து, எமக்களித்து அருள்புரிய வேண்டும் (24) என்றும், அன்னை மனோன்மணியாளை வழிபட்டுத் தொழுதற்குத் துணைப் பொருட்களானவற்றை நாங்கள் மகிழும் வண்ணம் பரிசாய்த் தந்தருள வேண்டும் (26) என்றும் வேண்டுகின்றனர்.

10.3 கோயிற்கதவம் திறக்க வேண்டல்

முக்கண்ணப்பரின் திருக்கோயிற் கதவம் திறந்திடுவதாக என்றும், அழகு பொங்கிப் பாயும் அழகன் திருக்கதவம் திறந்திடுவதாக என்றும், வீரபாகுத் தேவரால் காவல் காக்கப் பெறும் பெருமானுடைய கோயிலில் தனிக்கதவம் திறந்திடுவதாக என்றும் துயில் எழுப்பும் பெண்கள் வேண்டுகின்றனர் (25).

10.4 வள்ளியைத் தேடல்

"திங்கள் பொழியமுதச் செந்தேனிதழ் வள்ளி
எங்கள் பிரான் தன்னோ(டு) இனியுன் துயிலெழுந்து
எங்கள் குறைநேர்ந் திருந்தேலோ ரெம்பாவாய்"(25)

என வள்ளி யிடம் வேணடுகின்றனர்.

11. நோன்பை நிறைவு செய்தல்

ஒளிரும் இரத்தினம் பெற்ற காதணி, பொற்காப்பு முதலான அணிகளை அணிந்து கொள்வோம்; தூய பட்டாடை உடுத்துவோம்; இனிய சுவைமிக்க பாற்சோறு, உண்டி வகைகள் முதலியனவற்றைச் சுற்றம் சூழக் கலந்துண்டு மகிழ்வோம் (27) என நோன்பு நிறைவுற்றபின் நிகழ்வனவற்றைச் சுட்டுகின்றனர்.

இவ்வாறு, திருமுமுருகப்பாவை என்ற நூல் பாவை இலக்கிய மரபைப் பின்பற்றி பக்திச்சுவை நிரம்ப இயற்றப்பெற்றுள்ளமையை அறியலாம் இந்நூலில் இடம்பெறும் சிறப்புக் கூறுகள் சிலவற்றை இனிச் சுட்டலாம்.

1. 'திருமுருகப்பாவை' என்ற பெயருடன் திகழும் இந்நூலில் பாவை நோன்புக்குரிய தெய்வமாக இறைவியே சுட்டப் பெறுகின்றாள்.

2. முருகன் உறையும் மலைகளைச் சுட்டுமிடங்களில், அவண் சித்தர்கள் உறைவதாகக் காட்டி, சித்தர்களின் பல்வேறு பெருமைகள் கூறப்படுகிறது.

3. ஒவ்வொரு பாடலுக்கும் இராகமும், தாளமும் கொடுக்கப் பெற்றுள்ளன.

4. சித்தாந்தக் கருத்துக்கள் ஆங்காங்கே இடம் பெறுகின்றன.

5. பாவை நோன்பின் பொதுநல நோக்கமும் சுட்டப் பெறுகின்றது.

6. பாவை நோன்பு உடலுக்கும், உள்ளத்துக்கும் உரம் சேர்க்கும் நோன்பென்பதும் வலியுறுத்தப் படுகிறது.

பயன்பட்ட நூல்

பக்தவச்சலன், மு., (நூலாசிரியர் & பதிப்பாசியர்), திமுருகப்பாவை,
மந்தாகினி வெளியீடு, சென்னை, 1987.

உலகத்தமிழ் 8ம் மநாட்டு வெற்றிக்கும் அதனை ஒட்டி மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இருந்து வெளிவரும் செந்தமிழ் சிறப்பு மலருக்கும் எங்களின் உளம் கனிந்த பாராட்டும் வாழ்த்துக்களும்.

Sree Krishna Electricals,

89, West Avani Moola st.,

Madurai - 1.

Ph : 32977.

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூ ண்.

குறள் .983

தஞ்சையில் நடைபெறும் எட்டாம் உலகத் தமிழ் மாநாடு சீரோடும் சிறப்போடும் நடைபெறவும்

அம்மாநாட்டினையொட்டி மதுரைத் தமிழ் சங்கம் வெளியிடும் *செந்தமிழ் - சிறப்பு மலர்* நறுமணம் கமழவும்

நெஞ்சார வாழ்த்தும்

திருக்குறட் செம்மல் ந. மணிமொழியன், M.A.,
மேலாண்மை இயக்குநர்,
மதுரை நியூகாலேஜ் ஹவுஸ்,
மதுரை 625 001.

தமிழிசையும் இசைத்தமிழும்

(வா.கோ. கிருஷ்ணமூர்த்தி)

முன்னுரை:

அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் 1941 ஆம் ஆண்டு தமிழிசை மாநாட்டை நடத்திய நாள் முதல் தமிழிசை என்னும் சொல் பலராலும் பேசப்படுகின்றது. தமிழிசை பரவ வேண்டும், வளர வேண்டும் எனக் கூறுபவர்கள் அனைவரும் தமிழிசை என்பது தமிழில் பாடல்கள் பாடுவது என்று பொருள்படுமாறு பேசி வருகின்றனர். தெலுங்கிசை, மலையாள இசை, கன்னட இசை, சமஸ்கிருத இசை என்று மொழி சார்ந்து இசை வகைப் படுத்தப்படவில்லையாதலால் தமிழிசை பற்றிய தம் கருத்து வலுவற்றது என்பதையும் அவர்கள் அறிந்தேயிருக்கிறார்கள். தமிழிசை என்ற பெயர் வந்த காரணத்தையும் அதன் உண்மையான பொருளையும் விளக்க முடியாததால் தமிழிலில் பாடினால்தான் நம் மக்களுக்குப் பாடலின் பொருள் விளங்கும். ஆகவே, தமிழிலேயே பாட வேண்டும், இதுவே தமிழிசை எனக்கூறி, இசை, பாடல் இவ்விரண்டும் ஒன்றே என்பது போன்றதோர் தோற்றத்தை ஏற்படுத்திவருகின்றனர். இது தவிர கடந்த பத்து ஆண்டுகளாக தியாகராச சுவாமிகளின் தெலுங்குப் பாடல்களைத் தமிழில் மொழி பெயர்த்துப் பாடினால் தமிழ் மக்கள் அதனை வரவேற்பார்கள். இவ்வாறு, தமிழிசையை வளர்க்க முடியும் என்ற எண்ணம் இசைக் கலைஞர்களிடமும், பாடலாசிரியர்களிடமும் பரவியிருப்பதால் இம்மொழிபெயர்ப்பு முயற்சியில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். தமிழிசை வளர்ச்சி பற்றித் கூறும் தமிழிசை ஆதரவாளர்கள் செய்து வருவது வளர்ச்சிக்குத் தொடர்பில்லாத தமிழ்ப் பாடல்களைப் பரப்புவதேயாகும். இதன் காரணம், தமிழிசை வளர்ச்சி, தமிழிசையைப் பரப்புதல் இவ்விரண்டின் வேறுபாட்டினை அவர்கள் உணராததால் என எண்ண வேண்டியுள்ளது.

இத்தகையதோர் நிலை ஏற்படக் கூடாது என்பதைப் பல விவாதங்களில் உணர்ந்து 1941 ஆம் ஆண்டு தமிழிசை மாநாட்டில் தமிழிசையைப் பரப்புதல், தமிழிசை வளர்ச்சி ஆகியவை பற்றிச் சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன . தமிழ்ப் பாடல்களை இசைக் கலைஞர்கள் மேடையில் பாடாததன் காரணம் இசைப்படுத்தி சுரதாளக் குறிப்பு அமைக்கப்பட்ட தமிழ்ப் பாடல்கள் அக்கலைஞர்களுக்குக் கிடைக்காததேயாம். ஆகவே, பழம்பெரும் இசைமேதைகள், புலவர்கள் ஆகியோரின் தமிழ்ப் பாடல்கள் சுரதாளக் குறிப்போடு வெளிவர வேண்டும் என்றும், மேலும் பழம் புலவர்களியற்றிய பாடல்களைத் திரட்ட வேண்டும் என்றும் அம்மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது.

பழம் புலவர்களின் பாடல்களைப் பாடிப் பரப்புவதே சிறந்தது எனவும், புதுப் பாடல்களைப் புறக்கணிப்பது சிறந்த இசைப் பாடலாசிரியர்களுக்கு ஊக்கத் தடையாயமையுமாதலால் பாடல்களின் தரமறிந்து ஏற்கப்பட வேண்டும் எனவும் அம்மாநாட்டில் பேசப்பட்டன. ஆயினும், மொழிபெயர்ப்புச் செய்து பாடல்களைப் படைப்பது பற்றி அன்றும் பேசப்படவில்லை.

இன்று நாம் பாடிவரும் வேற்றுமொழிப் பாடல்களுக்கு நிகராகத் தரமுடைய பாடல்கள் தமிழில் உள்ளபோதும், எண்ணிக்கையில் மற்ற மொழியிலுள்ள மொத்தப் பாடல்களை விட அதிகமான தமிழ்ப் பாடல்கள் இருக்கும் போதும் அவற்றைத் தகுந்த முறையில் அச்சிட்டு வெளியிடுவது தமிழிசை பரவுவதற்கு வழிகோலுமே தவிர, மற்ற மொழிப் பாடல்களை மொழி பெயர்ப்பதால் நாம் எதிர் பார்க்கும் பலன் கிடைக்கும் எனக் கூற முடியாது. மாறாக, சில தீமைகளும், இழுக்கும் தமிழிசைக்கு ஏற்பட வழியுண்டாகும்.

தமிழ் மொழிக்கும் சிறப்பில்லையா? தமிழ் மொழியில் சிறந்த பாடல்கள் இல்லையா? பொருள் புரியாமல்

பிற மொழிப் பாடல்களை நாம் ஏன் பாட வேண்டும் என முழங்கும் நாம் பிற மொழிப் பாடல்களை மொழி பெயர்த்துப் பாடச் செய்வோமாயின், தமிழில் தரமான பாடல்கள் இல்லை எனக் கூறியவர்களின் / கூறுபவர்களின் கூற்றை ஒப்புக் கொண்டவர்களாவோம்.

மொழிபெயர்கப்பட்ட பாடல்கள் பாடுவது ஒரு நாகரிகம் ஆகி, அவை நிலைத்து மேடையில் பாடப்படாத பெரும்பான்மையான உயரிய தமிழ்ப் பாடல்கள் வழக்கொழிந்து பிற்காலத்தில் தமிழனின் இசைச் சொத்து மற்றவரிடமிருந்து கடன் வாங்கப்பட்டதே எனக் கூறும் நிலை தோன்றும்.

நல்லெண்ணம் கருதியே இம்மொழியாக்கம் பற்றி சிலர் பேசினாலும், அதன் விளைவு கருதும் போது அது தமிழ்ப் பாடல்கள் படைத்த பெருமக்களுக்கும் தமிழிசை வளர்ச்சிக்கு உழைத்த பெருமக்களுக்கும் செய்யும் துரோகமாகும்.

தமிழிசை வளர்ச்சியென்பது இலக்கண வளர்ச்சியையே குறிக்கும். இசை இலக்கியத்தின் வளர்ச்சியை அதன் இலக்கணக் கூறுகள் மூலமாகவே விளக்க முடியும். பழந்தமிழிசையின் இலக்கணத்தை முற்றிலும் அறிந்தால்தான் தமிழிசையை மேலும் வளர்ப்பதெப்படி என்பது பற்றி முடிவு செய்ய முடியும். எனவே, முதலில் பழந்தமிழிசையின் இலக்கணத்தை ஆராய்ந்தறிய வேண்டும் என்றும், இசையிலக்கள ஆராய்ச்சிக்கு முன்னோடியாக 1931 ஆம் ஆண்டில் தொடங்கிய "Standardisation of Carnatic Music"ல் என்னும் ஆராய்சித் திட்டத்தை விரிவாக்கிப் பழந்தமிழிசையிலக்கணத்தை அறிய வேண்டும் என்றும் தமிழிசை மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இசையிலக்கண ஆராய்ச்சி பல காரணங்களால் ஆரம்ப காலங்களிலேயே தடைப்பட்டு நிற்கவும், தமிழ்ப் பாடல்கள் அச்சிட்டு வெளிக் கொணரும் பணி மிகச் சிறப்பாக நடந்தேறியது.

தமிழிசை மாநாட்டில் 1960 ஆம். ஆண்டிற்குப் பின் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பான பணிகள் சிறப்பாகச் செயல்படவில்லை என எண்ண வேண்டியுள்ளது. மாறாக, முன்பு கூறியது போல் இசையிலக்கியம், இலக்கணம், மொழி, பாடல் இவை பற்றிய முரணான கருத்துக்கள் பொதுமக்களிடை மட்டுமல்லாது அறிஞர்களிடமும் கலைஞர்களிடமும் பரவி நிலைத்து விட்டன.

இத்தகையதோர் நிலை இன்று ஏற்பட்டுள்ள காரணம் தமிழிசை என்றால் என்ன? நம் நாட்டிசைக்கு அப்பெயர் வந்த காரணமென்ன? என்பதறியாது தமிழிசையின் உயர்வை நிலை நிறுத்தும் பொருட்டுப் புறக் காரணங்களைக் கூறி வந்ததும், இசையாராய்ச்சியில் நாம் இன்றும் மேற்பரப்பாகவே ஈடுபட்டு வருவதும் ஆகும். இப்புறக் காரணங்களையே கூறித் தமிழிசையின் உயர்வை, பெருமையை வெகுகாலம் நிலை நிறுத்த முடியாததலால் தமிழிசை, இசைத் தமிழ் இவை பற்றிய உண்மையான கருத்துக்களைத் தமிழ் மக்கள் அனைவரும் உணரச் செய்தல் முக்கியமானதாகும். அவை பற்றி இங்குக் கான்போம்.

தமிழிசை

தென்னாட்டில் வழங்கி வந்த / வழங்கி வரும் இசையின் இலக்கியத்தைக் குறிக்கும் தமிழிசை என்னும் இச்சொல் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த பெரிய புராணத்தில் காணப்படுகிறது. ஆகவே, இச்சொல் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முன்பாகவே வழக்கில் இருந்திருக்கக்கூடும் என அறிகிறோம். இத்தமிழிசையே இன்று கருநாடக சங்கீதம் என அழைக்கப்படுகிறது. ஆயின் கருநாடக சங்கீதம் என்பது இசைப்படுத்தப்பட்ட தமிழ் தவிர்த்த மற்ற மொழிப் பாடல்கள் குறிப்பது என்றும், தமிழிசை என்பது இசைப்படுத்தப்பட்ட தமிழப் பாடல்கள் குறிப்பது என்றும் பொருள்படுவ போல் இக்கால அறிஞர்கள் பேசி வருகின்றனர். மொழியினால் வெளிப்படுத்த முடியாத, இறைவனளித்த உடலின் புலனுணர்வால் மட்டும அறிய கூடியதாய்

அமைந்துள்ள இவ் இசைக்கு மொழியின் பாற்பட்டு இசைப்பெயர் ஆக்குவது அவ்விசைக்கோ அல்லது மொழிக்கோ கூட பெருமை சேர்ப்பதாகாது.

கருநாடாகக தேசத்தை கி.பி. 1116 முதல் 1127 வரை ஆண்ட சோமேசுவரமல்லர் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து கன்னட நாடு சென்ற இசைவாணர்கள் அங்கு இசைக்க, அதுவரை அத்தகையதோர் திறம்பெற்ற இனிய இசையைக் கேட்டு அறியாத வடமொழியில் சிறந்த கன்னட நாட்டினர் காதில் இனிமையாக ஒலித்துக் கொண்டே இருப்பது என்னும் பொருளில் "கர்ணாட" (கர்ண + அட) எனக் கூறி இவ்விசையைக் "கர்ணாட சங்கீதம்" என அழைத்தனர். இப்பெயர்க் காரணம் பிற்காலத்தில் மறைந்து தென்னாட்டு இசை மிகப் பழமையானது என்னும் பொருளில் இவ்விசை "கருநாடாக சங்கீதம்" என அழைக்கப்பட்டது. அந்நாளில் வாழ்ந்த தமிழர் இப்பெயர் வேறு பொருளை உணர்த்திவிடலாகாது என்னும் எண்ணத்தோடு தமிழிசைக்குக் கருநாடகம் என்னும் சொல்லுக்கிணையாகப் பழமை என்னும் சொல்லைச் சேர்த்துத் தம் இசையைப் பழந்தமிழிசை என்று அழைக்கலாயினர்.

பெரியபுராண காலத்தில் தமிழிசை என்றழைக்கப்பட்ட இசை பன்னிரண்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் கருணாட சங்கீதம் எனப்பட்டுப் பிற்காலத்தில் கருநாடக சங்கீதம் எனவும், பழந்தமிழிசை எனவும் பெயர் பெற்றது. சீரியதும், இலக்கண வளர்ச்சியுற்றதும், கேட்பதற்கு இனிமையானதும், இதற்கிணையான வேறொன்று இல்லாததும் ஆகிய தமிழிசையை மொழியின் காரணமாக வெறுப்போ மாறுபாடோ கொள்ளாத பிற மொழி பேசும் மக்கள் அப்படியே ஏற்றதில் வியப்பொன்றுமில்லை. பிற்காலத்தில் இசைப்பாடல்களைப் பாடுவது என்ற வழக்கமேற்பட்டபோது தமிழிசையானது கலிப்பாடல், பரிபாடல், தேவாரப்பாடல், சந்தமிகு தமிழ்மறை எனப்பட்ட ஆழ்வார் பாடல்கள் பாடப்பட்டபோது மற்ற மொழி பேசுவோர் இவ்விசையைத் தத்தம் மொழிகளில ஆக்கப்பட்ட பாடல்களோடு சேர்த்திசைத்தனர்.

அக்காலத்தில் தமிழரும், மற்ற மொழி பேசுவோரும் இசை, இசைப்பாடல் இவற்றின் தனித் தன்மைகளையும், இவற்றின் உறவு என்ன என்பதையும் உணர்ந்திருந்தனர்.

பிறமொழிப் பாடல்கள் கருநாடக இசையோடு இணைத்து இசைக்கப்பட்டபோது தெலுங்கிசை என்றோ, கன்னட இசை என்றோ, சமஸ்கிருத இசை என்றோ கூறப்படாததால் மூலமாகிய நம் நாட்டிசை தமிழ் மொழிப் பாடல்களோடு சேர்த்திசைக்கப்பட்ட காரணத்திற்காகத் தமிழிசை என்ற பெயர் பெறவில்லை என்றறிதல் வேண்டும்.

தமிழிசையிலக்கியம் தொல்காப்பிய காலத்திற்கும் முந்தியது என்பது, "இசைத்தமிழ்" என்னும் பின்வரும் பகுதியில் விளக்கப்படும். மேலும், பெரியபுராணத்தில் தேவாராப்பண் கட்டளை விளக்கம் கூறும்போது "வாசீகர் அருந்தமிழின் முந்திய பலதமிழ்" எனக் கூறியிருப்பது அகத்தியர் தமிழுக்கும் தமிழிசைக்கும் இலக்கணம் செய்வதற் கு முன்பே வழக்கத்திலிருந்த தமிழிசையின் திறங்கள் குறிக்கும் எனச் சில இசையிலக்கண ஆய்வாளர்கள் கூறியிருப்பது பொருத் தமுடையதாகத் தோன்றுகின்றது. எனவே, தமிழ் நாட்டில் இசையிலக்கியம் குறைந்தது கி.மு. பத்தாம் நூற்றாண்டிற்கு முன்னதாக வழக்கிலிருந்திருக்கக்கூடும் என்று கூறலாம்.

இசைத் தமிழ்

இசைத் தமிழ் என்பது இசையின் இலக்கணம் குறிப்பதாகும். இச்சொல்லும் முதன் முதலாகப் பெரியபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இசைத் தமிழ" என்றதன் பொருள் இன்று வெவ்வேறாகக் கொள்ளப்படுகிறது. சேக்கிழார் புராணத்தில்

(பாடல 46) "கவுணியர், நாவுக்கரசர், பேர்யார் இம்மூவர் இயல் இசை வல்லோர், இசைத் தமிழ் நூல் வல்லோர்," எனக் கூறப்பட்டுள்ளது. "இயல் இசை வல்லோர்" என்றது இசையின் இயலாகிய பாடல் குறிக்கும். இதனின்று இசைத் தமிழ் நூல் வல்லோர்" எனப் பிரித்துக் கூறியதால் அக்கால வழக்குப்படி நூல் என்றாலே இலக்கண நூல் குறித்தது (தொல்: பொருள் : திணையியல் : நச்சினார்க்கினியர் உரை : முன்னுரை பக். ஐஏ) இசைத் தமிழ் நூல் என்றது தமிழிசையிலக்கணம் என உணர்த்துவது காண்க.

இக்காலம் நம்மிடையுள்ள இசைத் தமிழ் நூல்களில் பழமையானது சிலப்பதிகாரமாகும். இது தனித் தமிழிசையிலக்கண நூலல்லவாயினும் பழந் தமிழிசை இலக்கனத்தின் பெரும்பகுதி இந்நூலினுள் மட்டும் புதைந்து கிடப்பதால் இதனையே இசைத் தமிழின் முதல் நூலாகக் கருத வேண்டியுள்ளது.

சிலப்பதிகாரம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு நூல் எனப் பல அறிஞர்களால் முடிவு செய்யப்பட்டுள்ளது. சிலப்பதிகார காலத்திற்கு முன் இசையிலக்கண நூல்கள் பல இருந்தன. அவற்றுள் பல சிலப்பதிகாரம் எழுதப்படு முன்னரே மறைந்து போயின என்று இக்காப்பியத்தின் உரைகள் வாயிலாய் அறிகிறோம். சிலப்பதிகார காலத்தில் இசை நுணுக்கமும், இந்திர காளியமும் இருந்திருக்கக் கூடும் என்றும், சிலப்பதிகாரத்தில் இசைத்தமிழ் கூற இளங்கோ அடிகளார் இவ்விரு நூல்களையும் ஆதாரமாகக் கொண்டார் என்றும் எண்ண இடமிருக்கிறது. எவ்வாறாயினும் மறைந்த இசையிலக்கண் நூல்கள் சிலப்பதிகார காலத்திற்குச் சில நூற்றாண்டுகளாவது முற்பட்டவை என்பது உறுதி..

தொல்காப்பியத்தில் இசைத்தமிழும் கூறப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணக் காரணங்கள் உள. செய்யுளியலுக்கு உரையெழுதிய பேராசிரியர் "இஃது இசைப் பாடலாகலின், இனிவருகின்றது அதற்குபகாரப்பட்ட இதனை

இறுதிக்கன் வைத்தான் . . ." (தொல் : பொருள் : 8; 233) என்று கூறியுள்ளார். செய்யுளியலின் கடைசி மூன்று பாக்களிலும் (தொல் : பொருள் : 8; 233 - 235) கூறப்பட்ட பொருளை ஆழ்ந்து நோக்கும்போது, அங்கு இசையிலக்கியத்திற்குக் கூறப்பட்ட இலக்கணத்தை எவ்வாறு பொருள் கூற வேண்டும் என்று கூறியதாக அறிய முடிகின்றது. தொல்காப்பியம் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு நூல் எனச் சில அறிஞர்களால் கருதப்பட்டாலும், அத்துணைத் தொன்மையானதாக இல்லாவிடினும் கூட சிலப்பதிகார உரை நூல்களில் கூறப்பட்ட மறைந்துபட்ட மற்ற இலக்கண நூல்களைவிட மேலும் பல நூற்றாண்டுகளுக்கு முந்தியது என்பதை யாவரும் மறுக்க முடியாது. தொல்காப்பிய நூலுக்கு முன்பாக இசைத் தமிழ் நூல்கள் உண்டு என்பது தொல்காப்பியம் மூலமாகவெ அறிகிறோம். 'அளபிறந்துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் . . . இசையொடு சிவணிய நரம்பின் மறைய . . . " எனும் (தொல் : எழுத் : 1 : 33) நுற்பாவும், "முந்து நூல் ஆய்ந்து முறைப்பட எண்ணி" எனும் சிறப்புப்பாயிரத்து வரியும் ஆய்ந்தறியத்தக்கன. இம்முந்து நூல் இசை நூலும் குறிக்குமென்றது "எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி" எனக் கூறிப் பின்னும் "செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு" எனப் பாயிரத்தில் உரைக்கப்பட்டதால் அறியலாம். செந்தமிழியற்கை சிவணிய நிலமென்பது எழுத்தசை சீர்களாகிய இசையின் இலக்கியம் சிவணிய அவ்விலக்கணமாகிய நிலம் எனப்பட்டது என்க. "தமிழ் கூறும் நல்லுகத்து" என முன்னமேயே பாயிரத்தில் கூறப்பட்டதாதலின் "செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்" என்பது தமிழ் நாடாகிய நிலம் எனப்படாது மக்களின் ஒழுக்கம் (செயற்பாடு) குறிக்கும் திணை குறித்து அச் செயற்பாட்டின் கீழ் அமையும் புலனெறிவழக்காகிய இசையினியற்கைக்கு (இசையிலக்கியம்) உரிய நிலமாகிய இலக்கணம் அல்லது திணை (நிலம்) சார்ந்து உரைக்கப்பட்ட இலக்கணம் குறித்தது என்க. இவ்வாறு பாயிரத்தில் இவ்வரிகள் இசையின் இலக்கண இலக்கியம் குறித்து கூறப்பட்டது என்க. எனவே, இசையிலக்கணம் தொல்காப்பியத்திலும் அதற்கு முன்பும் இருந்த மற்ற சில நூல்களிலும் கூறப்பட்டிருந்தது என்று அறிய முடிகின்றது. தொல்காப்பியத்திற்கு முன்னர் இருந்த நூல்களில் என்றதால் குறைந்தது கி.மு.பதினைந்தாம்

நூற்றாண்டிற்கு முன்பு எனத் துணியலாம். இலக்கணம் என்பது இலக்கியத்தின் உயர்நிலையையும் அதன் வரைமுறைகளையும் விளக்குவதால் தமிழிசையிலக்கியம் கி.மு.பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முனபாகவே இலக்கணம் செய்யப்படுமளவிற்கு உயர்நிலையடைந்திருந்தது என்று உறுதியாகக் கூற முடியும்.

மேலைநாடுகளின் இசை பற்றிய குறிப்புக்கள் சில கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இவற்றில் காலத்தால் முந்தியது கிரேக்க நாட்டு "டெல்ஃபிக்" பேயன் எனும் சிதைவுகளில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டாகும். கி.மு.நான்காம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டில் காணப்படுவது இசையொலிக் குறியீட்டுச் சொற்களும் எழுத்துக்களுமேயல்லாது இசை இலக்கணம் பற்றியதன்று. அக்காலத்து, அம்மேலைநாடுகளில் இசை இலக்கியம் எவ்வாறு உருப்பெற்றிருந்தது என்பதறிவதற்குச் சான்று எதுவும் இல்லை.

தமிழிசையிலக்கணத்தின் பரிமாணம், வளர்ச்சி, நீர்மை இவற்றோடு ஒப்பு நோக்கும்போது மேலைநாடுகளின் இசைக்கோ, மத்திய கிழக்கு, பாரசீக நாடுகளின் இசைக்கோ, கீழை நாடுகளின் இசைக்கோ இலக்கணம் என்றொன்று இருப்பதாகக்கொள்ள முடியவில்லை. நம்நாட்டில் கூட வேதம், புராணம், இதிகாசம் இவற்றில் கூறப்பட்ருப்பது இசை இலக்கியம் பற்றியே தவிர இசை இலக்கணம் பற்றியன்று.

உலகின் மற்றெப்பகுதியிலும் இசையின் இலக்கியங்கூட ஒழுங்கு பெறாத நிலையிலிருந்த காலத்துத் தமிழ்நாட்டில் இசைக்குத் தமிழ் மொழியிலெழுதப்பட்ட மிக்க உயர்நிலையையும் வளர்ச்சியையும் அடைந்த இலக்கணமே அமைக்கப்பட்டிருந்தது என்பது தெளிவாக உணர முடிகின்றது. அத் தகையை இலக்கியத்தையும் இலக்கணத்தையும் வகுத்து ஒழுங்கு செய்து இக்கலையை வளர்த்து வழக்கத்தில்

கொண்டிருந்தார்கள் தமிழர்கள். ஆதலால், தமிழரின் இசை என்று பொருள்படுமாறு இவ்விசை தமிழிசை எனப்பட்டது. தமிழ் என்றால் இனிமை, நீர்மை எனப் பொருள்படுதலால் தமிழரின், இனிமைமிக்க, நீர்மைமிக்க (Refined quality) இசை தமிழிசை என்க.

தமிழிசையிலக்கிய இலக்கணத்தில் பிற்கால மாற்றங்கள்:

தேவார மூவரின் காலம்வரை மாற்றமின்றிவழங்கிவந்த இவ்விசையிலக்கியம் அவர்கள் காலத்தின் பின்னர் அடைந்த நிலையை நாம் அறிய முடியாதவர்களாக இருக்கிறோம். அக்காலத்தில் குருகுல முறையில் இசைபயின்ற மாணவர்களுக்கு இசைஇலக்கணம் பயிற்றுவிக்கப்பட்டதா என்பது பற்றியும் அறிய முடியவில்லை. பிற்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பின்னர் பழந்தமிழிசை இலக்கணம் வழக்கொழிந்தது என எண்ண வேண்டியுள்ளது. ஆயினும் இசையிலக்கியம் கருவி மற்றும் வாய்மொழி இசைத்தும் செவிவழிக்கேட்டும் மேலும் பல நூற்றாண்டுகள் பழமை மாறாது பின் சந்ததியினரால் ஆளப்பட்டு வந்தது என அறிய முடிகின்றது.

கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரை தமிழிசைக்குப் புதியதோர் இலக்கணம் படைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்விலக்கண நூல்களில் சில பழந்தமிழிசையிலக்கணத்தோடு ஒருபால் ஒட்டியும், மற்றோர்பால் சாராமலும் எழுதப்பட்டவையாகும். எனவே, இந்நூல்கள் மூலம் பழந்தமிழிசையிலக்கணத்தை அறியமுடியாத நிலை உள்ளது.

இதற்கிடையே பதின்மூண்டாம் நூற்றாண்டின் இறுதியில் சாரங்கதேவர் எனும் அறிஞர் தென்னாடு முழுவதும் விரிவானதோர் பயணம் மேற்கொண்டு, இசையறிஞர்களைச் சந்தித்து, பழந்தமிழிசையிலக்கணத்தைப் பெரும்பான்மையும் ஒட்டி சங்கீத இரத்னாகரம் எனும் நூலை வடமொழியில் எழுதினார்.

பதினேழாம் நூற்றாண்டில் தமிழிசைக்கு (கருநாடக சங்கீதத்திற்கு) எழுதப்பட்ட சதுர்த்தண்டிப் பிரகாசிகை எனும் வடமொழிநூல் பெரும்பான்மை சங்கீத இரத்னாகரத்தைச் சாராதும், வழக்கிலிருந்த தென்னாட்டு இசையின் இலக்கியத்தைக் கருதாதும் எழுதப்பட்டதால் இவ்விலக்கணம் இலக்கியத்தோடு பல இடங்களில் முரண்பாடு கொண்டுள்ளது. இன்று வழக்கிலுள்ள இசையிலக்கண நூல் எனக் குறிப்பிடப்படும் இந்நூலின் கருத்துக்கள் இசைபயிலும் மாணவர், பயிற்றுவிக்கும் ஆசிரியர் இருவரிடமும் தெளிவை ஏற்படுத்துவதற்கு மாறாகக் குழப்பத்தையே ஏற்படுத்தி வருகின்றது.

இன்று இசையிலக்கியத்திலும் பெருந்தேய்வு காணப்படுகின்றது. இசைக்கு இசைப்பாடல் என்ற நிலைமாறி இசைப்பாடலுக்காக இசை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. நிறவாளத்தி (இராக ஆலாபனை), காட்டாளத்தி (தானம் பாடுதல்) போன்ற இசை சார்ந்த செயற்பாடுகள் குறுகி இயல் சார்ந்த இசைப்பாடல்களைப் பாடுவதற்கே இசை நிகழ்சிகளின் பெரும் நேரம் ஒதுக்கப்படுகிறது. பாடல்கள் இசை நிகழ்ச்சிகளில் முதன்மை பெற்றதனால் அப்பாடல்கள் அமைந்த மொழி இசையை அறிவதற்கு இன்றியமையாதது என்றும், இசையும் இசைப்பாடலும் ஒன்றே என்றும் எண்ணும்படியாயிற்று. இது தவறான எண்ணமேயாயினும் இசையில் ஈடுபாடு எவ்வாறு, எதனால் ஏற்படுகின்றது என்பதை அறியாது மக்களே குழம்பி நிற்கும் இந்நாளில் இசைப்பாடல்களின் பொருள் மூலமாகவே அவர்களை இசையின்பால் ஈர்த்து இசையின் உண்மையை அறியச் செய்ய வேண்டிய நிலையிலுள்ளோம். எனவே, தமிழ் நாட்டில் தமிழ்ப்பாடல்கள் பாடுவது இன்றியமையாததாகும்.

இந்நிலையில் இசையின் வளர்சிக்கு நாம் செய்யக் கூடியது என்ன என்று பார்ப்போம்.

இசையைப் பரப்புவது என்பது மொழி சார்ந்த இசைப்பாடல்கள் .மூலம் என முன்பு கூறினோம்.

இசையின் வளர்ச்சி என்பது இசையிலக்கியம், இலக்கணம் இவ்விரண்டின் வளர்ச்சி குறிக்குமாதலால் பழந்தமிழிசையின் இலக்கியம் , இலக்கணம் இரண்டையும் தெளிவாக அறிதல் வேண்டும். வளர்ச்சி என்பது மேம்பாடு குறிக்குமாதலாலும், இசையைப் பொறுத்தவரை அதன் வளர்ச்சி இலக்கண மூலமாகவே விளக்கப்பட முடியுமாதலாலும் இசையின் இலக்கணம் முன்பு எத்தகைய வளர்ச்சியைப் பெற்றிருந்தது என அறிந்து அதனோடு ஒப்பு நோக்கிய பின்பே மேலும் பெற்ற வளர்ச்சியினையும், பெற வேண்டிய அல்லது பெறக்கூடிய வளர்ச்சியினையும் அறிய முடியும்.

இசையிலக்கியத்தில் மாற்றங்கள் பல ஏற்பட்டிருப்பினும் பழைய முறை வழுவாது இசைக்கும் தேவார ஓதுவாமூர்த்திகள் தமிழ் நாட்டிலும், பழைய முறைப்படி கதகளி பாடல்கள் பாடும் கலைஞர்கள் கேரள நாட்டிலும் இருப்பதால், இக்கலைஞர்களின் துணைகொண்டு தென்னாட்டிசையின் இலக்கியத்தை திரும்பப் பெறமுடியும் என்று உறுதியாகக் கூறலாம்.

நம்முன்னோர்கள் இசையை எம்முறைகளில் வளர்ச்சி அடையச் செய்யமுடியும் என்றாராய்ந்து அத்தகைய வளர்ச்சியனைத்தையும் அடையச் செய்திருப்பதால் இசையினை மேலும் வளர்ப்பதர்க்கு வாய்ப்பில்லை என இசையிலக்கணத்தை நன்கு அறிந்த அறிஞர்கள் கூறியுள்ளனர்.

இது தவிர இசையில் புதுமை என நாம் எண்ணக் கூடிய மாற்றங்கள் எவ்வாறு இலக்கணம் கூறும் வரைமுறைகளுக்குப் புறம்பாயமையும் என்றும், அதனால் இசை எவ்வாறு கேடுறும் என்றும் நம் முன்னோர்கள் விளக்கியுள்ளார்கள்.

எனவே, பழந்தமிழிசையின் இலக்கணத்தோடு ஒத்துவராத எவ்விதமான இலக்கிய மாற்றமும் அல்லது புதுமையும் வளர்ச்சியாகாது, தேய்வையே குறிக்கும் என்பது அறியற்பாலது.

இசை இலக்கியம் புலனால் உணரப்படும் கலையாதலாலும், அவ் இசையைச் சுரக்குறிப்பாக எழுதும் வழக்கம் பண்டை நாளில் இல்லையாதலாலும் அவ்வாறு இசை முழுவதையும் எழுதிவைப்பது என்பது இன்றும் கூட இயலாதது ஆதலாலும், பழந்தமிழிசையின் இலக்கணம் நூல்களில் கிடைக்கின்றனவாதலாலும், அதனை ஒட்டியே வடமொழி நூலாகிய சங்கீத இரத்னகாரம் எழுதப்பட்டுள்ளதாலும், பழைய முறை இசை இலக்கியம் தென்னாட்டின் உட்புறப் பகுதிகளில் இன்றும் வழக்கிலிருப்பதாலும், இவற்றின் துணைக் கொண்டு பழந்தமிழிசை இலக்கியத்தை நாம் ஆராய்ந்து அறிய முடியும்.

இவ்வாறு பழந்தமிழிசை இலக்கணத்தையும் இலக்கியத்தையும் முற்றிலும் அறிந்த பின்னர் இசையின் வளர்ச்சி பற்றி எண்ண முடியுமாதலால் இசையிலக்கணத்தைக் கண்டறிவது நமது முதற்கடமையாகும். இலக்கணத்தின் மூலம் இசையிலக்கணத்தையறிந்து, அதன் பின்னர் இவ்விசையிலக்கண வரைமுறைகளுக்கொப்பப் புதிய இசையிலக்கியம் படைக்க முடியுமாகில் அப்புதுமைகளும் மாற்றங்களும் ஏற்றுக் கொள்ளப்படுபவையாக இருக்கும்.

முடிவுரை:

தமிழிசையைப் பரப்புவதற்கு மேலும் புதிய தமிழ்ப் பாடல்களைப் படைக்கவோ வேற்றுமொழிப் பாடல்களைத் தமிழாக்கம் செய்யவோ தேவையில்லை. பழம் பெரும் இசைப் பாடலாசிரியர்களின், புலவர்களின் பாடல்களைப் பொருத்தமான முறையில் இசைப்படுத்தி. சுரதாளக் குறிப்பமைத்து அச்சிட்டு வெளிவிடுவதே நன்மை பயக்கும்.

தமிழிசையின் வளர்ச்சி என்பது இலக்கணத்தோடு தொடர்புடையதாதலால் பழந்தமிழ் நூல்களில் காணப்படும் இசைக் கருத்துக்கள் யாவற்றையும் ஆராய்ந்தறிந்து தொகுத்து இசையிலக்கண நூலாக வெளியிடப்பட வேண்டும். இதன் பின்னரே தமிழிசையை மேலும் வளர்ச்சியடையச் செய்வது பற்றி எதுவும் கூற முடியும்.

இவ்விரு செயல்கள் மூலமாகவே தமிழரின் இசையாகிய தமிழிசையின் பெருமையையும் சிறப்பினையும் உலகறியச் செய்ய முடியும்.

தரணி புகழ் தமிழ் மேலும் தளைத்திட
எங்களது நல்வாழ்த்துக் கள்.

இன்சீனியரிங் & ஆட்டோ டூல்ஸ்

&

குப்புசாமி இன்சீனியரிங் டூல்ஸ்

H.O. : 2, தொட்டியன் கிணற்றுத் தெரு,
மதுரை. 625 001

B.O. : 180, வடக்கு வெளி வீதி,
மதுரை 625 001.

Phone : 27185, 31151, 32980.

வெள்ளி விழா ஆண்டு சிறப்பு வெளியிடு !

அகிம்சையை நோக்கி புனித

யாத்திரை

(விநோபா உரைகளிலிருந்து தொகுப்பு)

ஒவ்வொருவரும் வாங்கிப் படித்து
அறிய வேண்டிய ஓர் அரிய நூல்

சர்வோதய இலக்கியப் பண்ணை,

32 / 1, மேல வெளி வீதி,
மதுரை - 1.
போன் : 31746.

பேச்சுத் தமிழில் வேற்றுமைகள்

பேராசிரியர். என். கிருஷ்ணன்.

1. ஒரு குறிப்பிட்ட இனம்,வட்டாரத்தில் வழங்கப்படும் பேச்சுத்தமிழை ஆய்வு செய்கின்ற நிலை பெருவாரியாக நடைபெற்றுள்ளது. எனினும் ஒரு குறிப்பிட்ட இன, வட்டாரப் பேச்சுத் தமிழில் காணலாகும் வேற்றுமைகளை மட்டும் குறித்தான ஆய்வு பெருமளவில் நடைபெறவில்லை. இதனால் நாகர்கோவில் நகர மக்களின் பேச்சுத் தமிழில் காணப்படும் வேற்றுமைப் பயன்பாடுகள் குறித்து இங்கு ஆய்வு செய்யப்படுகின்றது.

2, வேற்றுமை இலக்கணம்:

தமிழ் மொழயில் காணப்படும் சொற்றொடர்களில் பெயர்ச் சொல்லுக்கும், வினைச்சொல்லுக்கும் இடையே ஒருவிதப் பொருள் தொடர்பு இருப்பதைக் காணலாம். பெயரோடு இணைந்திருக்கும் ஒட்டுக்களை வேற்றுமை உருபுகள் என்றும், பொருள் மாறுபாட்டினை வேற்றுமைகள் ஏன்றும் கூறுகிறோம்.

வேற்றுமை இலக்கணம் பற்றி மரபிலக்கணத்தார் கொண்டுள்ள கருத்துக்கள் பின்வருமாறு:

வேற்றுமை இலக்கணம் பற்றி தொல்காப்பியர் கூறவில்லை. அவர் வேற்றுமை வகைகள் பற்றிக் கூறுகின்றார். ஆனால், நன்னூலார் வேற்றுமை இலக்கணம் கூற விழைக்கின்றார்.

"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கு மீறாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை"

(நன். சூத்.291)

"பெயர்ப் பொருளைச் செயப்படுபொருள் முதலியனவாக வேறுபடுத்தியுணர்த்தலின் வேற்றுமையாயின"

என்று சேனாவரையர் வேற்றுமையின் இலக்கணம் குறித்து விளக்குகிறார்.

"ஒரு பொருளை ஒரு கால் வினைமுதலாக்கியும் ஒருகாற் செயப்படு பொருளாக்கியும், ஒருகால் ஏற்பது ஆக்கியும், ஒரு கால் நீங்க நிற்பது ஆக்கியும், ஒருகால் உடையது ஆக்கியும், ஒருகால் இடம் ஆக்கியும் இவ்வாறு தம்மையேற்ற பெயர்ப்பொருளை வேறுபடுத்தின மையால் வேற்றுமையெனப்பட்டன."

என்று தெய்வச்சிலையார் வேற்றுமை குறித்து விளக்குகிறார்.

இக்கால மொழியிலாளர்களும் வேற்றுமையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்கள்.

"ஒரு பெயர்ச் சொல்லுக்கும், பயனிலையாக வரும் ஒரு வினைச்சொல்லுக்கும் இடையே உள்ள பொருள் தொடர்பு சில ஒட்டுக்களால் காட்டப்படும்போது அதனை வேற்றுமை எனலாம்".

(ச.அகத்தியலிங்கம். 1979 : 197)

என்று மொழியியல் அறிஞர் அகத்தியலிங்கம் கூறுகின்றார்.

"தொடரில் ஒரு பெயர்ச் சொல்லுக்கும், ஒரு வினைச் சொல்லுக்குமிடையேயுள்ள பொருட் தொடர்பாகிய இலக்கண உறவே வேற்றுமை எனப்படும். இவ் உறவு சில ஒட்டுக்களால் (வேற்றுமை உருபு) வெளிப்படுத்திக்காட்டப் பெறுதலும் உண்டு"

(ஏ. ஆதித்தன், 1981:90)

என்றும் வேற்றுமை குறித்து விளக்கம் கூறப்படுகிறது.

3. வேற்றுமை வகைகள்:

நாகர்கோவிலில் பேச்சுத்தமிழில் எழுவாய் வேற்றுமை, செயப்படு பொருள் வேற்றுமை, உடனிகழ்ச்சி வேற்றுமை, கொடை வேற்றுமை, காரண வேற்றுமை, நீக்க வேற்றுமை, உடைமை வேற்றுமை, இட வேற்றுமை, விளி வேற்றுமை, என்ற பத்து வேற்றுமைகள் காணப்படுகின்றன.

3.1. முதல் வேற்றுமை அல்லது எழுவாய் வேற்றுமை(Nominative)

எழுவாய் வேற்றுமைக்கென தனிஉருபு இல்லை. பெயர்ச் சொல்லின் அடிப்படை வடிவமே எழுவாய் வேற்றுமையாக வரும்.

(எ.கா) 1. பசுவு எங்க போச்சி.
2. மாடு நொண்டுது.

3.2 இரண்டாம் வேற்றுமை அல்லது செயப்படுபொருள் வேற்றுமை(Accusative)

- எ, -எயெ, - என்ற உருபுகள் இரணடாம் வேற்றுமைப் பொருளை உணர்த்துகின்றன.

-எ உருபு மூவிடப் பெயர்களுடனும், உயர்திணைப் பெயர்களுடனும் அஃறிணைப் பெயர்களுடனும் வரும்.

(எ.கா) 1. என் - எ > என்னெ
என்னெ யாரு கூப்ட்டது
2. உன் - எ > உன்னெ
உன்னெ பாக்கனும்
3. அவென - எ > அவெனெ
அவெனெ கூப்புடு

4. குமார் - எ > குமாரெ
குமாரெ அடி
5. மீன் - எ > மீனெ
மீனெ கழுவு.

- எயெ உருபு தன்மை, முன்னிலைப் பெயர்களுடன் வருகின்றது

(எ.கா) 1. என் - எயெ > என்னெயெ
என்னெயெ பாத்தாரு
2. உன் - எயெ > உன்னெயெ
உன்னெயெ ஏசுனாரு.

- வெற்றுருபானது அஃறிணைப் பெயரினை அடுத்து வரும்.

(எ.கா) 1. நீ பாலு - ϕ - குடி
2. நீ மீனு - ϕ - புடிக்க போ

3.3. மூன்றாம் வேற்றுமை:

மூன்றாம் வேற்றுமையை கருவி வேற்றுமை என்றும் உடனிகழ்ச்சி வேற்றுமை என்றும் பாகுபடுத்தலாம்.

3.3.1 . கருவி வேற்றுமை:(Instrumental)

இவ்வேற்றுமையை உணர்த த-ஆலெ, -எவச்சி, -எவச்சு -எகொண்டு உருபுகள் பெயர்ச் சொற்களுடன் பின்னொட்டாக வருகின்றன.

(எ.கா) 1. கத்தி - ஆலெ > கத்தியாலெ
கத்தியாலெ வெட்டினான்.
2. கத்தி - எவச்சி > கத்தியெவச்சி
கத்தியெவச்சி நறுக்கினான்
3. கத்தி - எவச்சு > கத்தியெவச்சு
கத்தியெவச்சு அறுத்தான்
4. கத்தி - எகொண்டு > கத்தியகொண்டு
கத்தியகொண்டு கீறினான்.

3.3.2. உடனிகழ்ச்சி வேற்றுமை:(Sociative)

இவ்வேற்றுமையைக் குறிக்க - ஓடெ, - ஓடு, -கூடெ என்ற வேற்றுமை உருபுகள் பெயர்ச்சொல்லை அடுத்து வருகின்றன.

(எ.கா) 1. அவென் - ஓடெ > அவெனோடெ
அவ அவெனோடெ போனா
2. என் - ஓடு > என்னோடு
என்னோடு வந்தா
3. பையன்கள் - ஓடி > பையன்களோடி
பையன்களோடி வந்தாரு
4. எங்கள் - கூட > எங்க கூடெ
எங்க கூடெ வருவாரு.

3.4. நான்காம் வேற்றுமை:

நான்காம் வேற்றுமையை கொடை வேற்றுமை என்றும் காரண வேற்றுமை என்றும் இரு வகையாகப் பாகுபடுத்தலாம்.

3.4.1. கொடை வே, றுமை:(Dative)

இவ்வேற்றுமையை உணர்த்த - க்கு, - இக்கி, - க்கி, - அக்கு, - உக்கு என்ற வேற்றுமை உருபுகள் வருகின்றன.

(எ.கா) 1. நம்மள் - க்கு > நம்மளுக்கு.
நம்மளுக்கு பணம் குடு.
2. தாய் - இக்கி > தாயிக்கி
தாயிக்கி பணத்ததெ குடு.
3. மணி - க்கி > மணிக்கி
மணிக்கி வேலெயெ குடு.
4. ஒன் - அக்கு > ஒனக்கு
ஒனக்கு கடம் தாரேன்

5. அவியள் - உக்கு > அவியெளுக்கு
அவியெளுக்கு உருப்படியெ குடு.

3.4.2. காரண வேற்றுமை:(Purposive)

- க்காகெ, - க்காவெ, -அக்காகெ, - உக்காகெ என்ற வேற்றுமை உருபுகள் காரண வேற்றுமை உணர்த்த வருகின்றன.

(எ.கா) 1. புள்ள - க்காகெ > புள்ளெக்காகெ
புள்ளெக்காகெ கட்டப்படுறா
2. தங்கச்சி - க்காவெ > தங்கச்சிக்காவெ
தங்கச்சிக் காவெ பணம் சேக்காரு
3. என் - அக்காகெ > எனெக்காகெ
எனக்காகெ கடம் கொடுத்தாரு
4. அவென் - உக்காகெ > அவெனுக்காகெ
அவெனுக்காகெ சண்டெ வந்து

3.5. ஐந்தாம் வேற்றுமை அல்லது நீக் க வேற்றுமை(Ablative)

இடப்பொருள் வேற்றுமை உருபுகளான - எ, - லே, - ட்டெ, - கிட்டெ, - குட்டெ என்பவனவற்றுடன் - ருந்து என்ற வேற்றுமை உருபு இணையும்போது நீக்க வேற்றுமை. கிடைக்கின்றது. பேச்சுத் தமிழில் ஒரு பெயருடன் இரண்டு வேற்றுமை உருபுகள் இணைந்து வருவது குறிப்பிடத்தக்க நிலையாகும்.

(எ.கா) 1. தெக்கு - எ - ருந்து > தெக்கெருந்து
தெக்கெருந்து வந்தான்.
2. மதில் - லெ - ருந்து > மதில்லெருந்து
மதில்லெருந்து விழுந்தான்.
3. வடக்கு - லே - ருந்து > வடக்லேர்ந்து
வடக்லேர்ந்து வருது.
4. அப்பா - ட்டெ - ருந்து > அப்பாட்டெருந்து

5. அண்ணென் - கிட்டே - ருந்து >
அண்ணென்கிட்டெருந்து.
அண்ணென்கிட்டெருந்து கடுதாசி வந்தது.
6. தம்பி - குட்டெ - ருந்து > தம்பிகுட்டெருந்து
தம்பிகுட்டெருந்து ரூபாயெ வாங்கு

3.6. ஆறாம் வேற்றுமை அல்லது உடைமை வேற்றுமை (Genitive)

இவ்வேற்றுமை ஏனைய வேற்றுமைகளில் இருந்து சொற்றொடர் அமைப்பில் வேறுபடுகிறது. ஏனைய வேற்றுமைகள் வினைச் சொற்களுக்கு முன்னே மட்டும் ஆகும். ஆனால் இவ்வேற்றுமை ஒரு பெயருக்கும் பிறிதொரு பெயருக்கும் இடையே வரும்.

- உடெயெ, - ஒடெயெ, - அடெயெ, - ஓடெ, - அக்கெ, - உக்கெ, -அடெ, - ϕ என்ற உருபுகள் உடைமை வேற்றுமையை உணர்த்த வருகின்றன.

(எ.கா) 1. எங்கள் - உடெயெ > எங்களுடெயெ
எங்களுடெயெ வீடு
2. என் - ஒடெயெ > என்னொடெயெ
என்னொடெயெ பொஸ்தகம்
3. நம் - அடெயெ > நம்மடெயெ
நம்மடெயெ களம்
4. என் - ஓடெ > என்னோடெ
என்னோடெ சின்னம்மா
5. என் - அக்கெ > எனெக்கெ
எனெக்கெ சட்டெ
6. என் - உக்கெ > எனுக்கெ
எனுக்கெ மூத்தப்பா
7. நம் - அடெ > நம்மடெ
நம்மடெ தோப்பு
8. என் - ϕ - தள்ளெ > என் தள்ளெ

3.7. ஏழாம் வேற்றுமை அல்லது இட வேற்றுமை (Locative)

இவ்வேற்றுமைமைய உணர்த்த பெயர் சொற்களுடன் - எ, - வெ, - லே, - ட்டெ, - கிட்டெ, - குட்டே என்ற வேற்றுமை உருபுகள் இணைந்து வருகின்றன.

(எ.கா) 1. தெக்கு - எ > தெக்கே
தெக்கெ உள்ள வீடு
2. வீடு - லெ > வீட்லெ
வீட்லெ இருக்கான்
3. வீடு - லே > வீட் லே
வீட்லே உள்ள சாமானம்.
4. அவள் - ட்டெ > அவட்டெ
அவட்டெ இருக்கு
5. மாடு - கிட்டெ > மாட் டுகிட்டே
மாட்டுகிட்டெ போவாதெ
6. தம்பி - குட்டெ > தம் பிகுட்டெ
தம்பிகுட்டெ குடுக்காத

3.8. எட்டாம் வேற்றுமை அல்லது விளி வேற்றுமை (Vocative)

விளிவேற்றுமைக்கென்று தனி உருபோ, சொல்லோ இல்லை. பெயர்ச் சொல்லின் அடிப்படை வடிவத்தில் சில ஒலியன்கள் மாற்றமடைந்து விளிவேற்றுமையை உணர்த்துகின்றது.

சொல்லின் ஈற்றில் உள்ள மெய் ஒலியன் கெட்டு அதற்கு முந்திய ஒலியன் நெடிலாகி விளி வேற்றுமையை உணர்த்தும் .

(எ.கா) முருகன் > முருகா

சொல்லின் ஈற்றொலி உயிராக இருந்தால் அவை கெடாமல் நெடிலாகி விளி வேற்றுமையை உணர்த்துகிறது.

(எ.கா) லெட்சுமி > லெட்சுமீ

சொல்லின் ஈற்றொலி நெட்டுயிராக இருந்தால் அதுவே மேலும் சில மாத்திரைகள் பெற்று நீண்டு ஒலிக்கின்றன.

(எ.கா) ராஜா > ராஜா (ஆ)

4. இலக்கணிகள் வரையறுத்துள்ள வேற்றுமைகள் பெரும்பாலும் மாற்றம் இல்லாமல் நாகர்கோவில் பேச்சுத் தமிழில் உள்ளன. ஆனால் அவர்கள் கூறியுள்ள வேற்றுமை உருபுகள் * (அட்டவணையில் காண்க). சில திரிந்தும், சில வழக்கிழந்தும் நாகர்கோவில் பேச்சுத் தமிழில் காணப்படுகின்றன.

Geeaarems

Suiting & Shirting

Geeaarems A/C

எட்டாம் உலகத் தமிழ் மாநாடு சிறப்புற
எங்களின் வாழ்த்துக்கள்

G - Tex Building

22- Alagar Koil Road,
Madurai - 2
✆ 631188

இலக்கண நூல்கள் கூறும்

வேற்றுமை உருபுகள்	தொல் காப்பியம்	வீர சோழியம்	நேமி நாதம்	நன்னூல்
2ஆம் வேற்றுமை உருபு	ஐ	ஐ	ஐ	ஐ
3ஆம் வேற்றுமை உருபு	ஒடு	ஒடு, ஓடு,ஆல்	ஆண், ஒடு.	ஆல்,ஆண் ஒடு, ஓடு.
4ஆம் வேற்றுமை உருபு	கு	கு பொருட்டு	கு	கு
5ஆம் வேற்றுமை உருபு	இன்	நின்று	இன்	இன், இல்
6ஆம் வேற்றுமை உருபு	அது	உடை	அது	அது,ஆது, அ
7ஆம் வேற்றுமை உருபு	கண் போன்றன.	கே,உழை, வயின்,உழி, இல்		கண்,கால் மேல்,கீழ், வலம், இடம்,

வேற்றுமை உருபுகள்.

பிரயோக விவேகம்	இலக்கண விளக்கம்	இலக்கண கொத்து	தொன்னூல் விளக்கம்	முத்து வீரியம்
ஐ	ஐ	ஐ	ஐ	ஐ
ஆன், ஒடு	ஆல்,ஆண் ஒடு. ஓடு	ஆல்	ஆல்,ஆண் ஒடு, ஓடு	ஆல்
கு பொருட்டு	கு	கு	கு	கு
இன்,இல்	இன்,இல்	இன்	இல்,இன்	இன், இல்.
அது.கு. உடைய, அ	அது.ஆது அ		அது.ஆது அ	அது. ஆது. அ
இல், கண்	கண்	கண்	கண்	கண்

"சிறுவெண் காக்கையார்"

'கன்னக்குறிச்சி வை.தங்கமணி',

சங்க இலக்கியங்களான எட்டுத் தொகை நூற்களுள் இரண்டாவதாக வைத்து எண்ணப்படும் குறுந்தொகையில் இருந்து ஒரு பாடல்:

"பெருங்கடல் கரையது சிறுவெண் காக்கை
நீத்துநீர் இருங்கழி இரைதேர்ந்து உண்டு
பூக்கமழ் பொதும்பிற் சேக்கும் துறைவனொடு
யாத்தேம் யாத்தன்று நட்பே
அவிழ்தற் கரிது முடித்தமைத் தன்றே."

(பாடல் எண்.313)

கூற்று : தலைவி கூற்று.

துறை: இரவுக் குறி வந்து ஒழுகும் காலத்து தலைமகனது வரவு உணர்ந்து 'பண்பிலர்' என இயற்பழித்த தோழிக்கு அவரொடுபிறந்த நட்பு அழியாத நட்பன்றோ என்று சிறைப்புறமாகத் தலைமகன் இயற்பட மொழிந்தது. அஃதாவது, இரவின்கண் மனை அயலே தலைவன் வந்து நிற்றலை அறிந்த தோழி அவன் வரவு அறியாதாள் போன்று அவனைக் குறைகூறக் கேட்ட தலைவி. அது பொறாதவளாய்த் தலைவனைப் புகழ்ந்தது.

பெரிய கடற்கரையின் கண்ணே உளதாகிய சிறிய வெண்மை உடைய காக்கை நீந்துதற்குக் காரணமான நீர்ப்பெருக்குடைய பெரிய கழியிடத்தே இரையைத் தேடித்தின்று, மலர் மணக்கும் சோலையில் உறைகின்ற கடற்கரையை உடைய நம் தலைவரோடே நம்மைக் காட்டினோம். அங்ஙனம்க் காட்டப்பட்டமையாலே உண்டான நட்பும் நன்கு பொருந்துவதாயிற்று, அது யாராலும் பிரித்தற்கு அரியதொன்றாகிய நிறைவினை உடையது.

இதன்கண் 'தலைவன் அன்பிலான், எனப்பழித்த தோழியை நோக்கித் தலைவி 'அவனது நட்பு என்றென்றும் அழியாத சிறந்த நட்பாகும். யாராலும் பிரிப்பதற்கு அரியதாகும்' என்று புகழ்ந்து உரைக்கிறாள்.

இப்பாடலில் 'பெருங்கடல்.. சிறுவெண் காக்கை' என்று முரண்தொடை வந்து செய்யுள் இன்பம் பெருகுவதைக் காணலாம். சிறிய வெண்மை நிறமுடைய காக்கையானது உணவைத் தேடியுண்டு மலர் மணக்கும் சோலையில் தங்கும் என்பதால் களவொழுக்கத்தில் நிற்கும் தலைவன் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவான் என்பது குறிப்பு.

தலைவனோடு யாம் கொண்ட நட்பானது, பற்பல பிறப்புகளிலே தொடர்ந்து வந்ததாகலின் பிறரால் பிரிக்கப்பட முடியாது. 'யாத்தேம் யாத்தன்று நட்பே', அவிழ்த்தற்கு அரிது என்ற தொடரால் அறியலாம்.

கரையை உடைய பெரிய கடல் ஓரம் நீந்துவதற்கு அரியவழி இடத்து இரைதேர்ந்து உண்டு பூஞ்சோலையில் தங்கும். அதாவது, களவொழுக்கம் விட்டுத் திருமணம் செய்து வாழ்வான் என்பதாம்.

இங்கே இரைதேர்ந்து உண்ணுவது காகம், அதுவும் வெண் காக்கை தொடர்ந்து சிறுவெண் காக்கை.

கரையை உடைய பெரிய கடல். நீந்துவதற்கரிய பெரிய கழி. இங்கேயே தங்கிவாழும் காகம். வெண்மை ஆனதால் தூய்மை ஆனது என்றும், ஆண்மை நோக்க இது 'சிறியது' என்றும் பொருள் தரலாம்.

வரைந்துகொள்பவன் மணம் பரப்பும் மலர்களை உடைய சோலைக்கு உரியவன். வளம் உடைய மருத நிலத்திற்கும் உரியவன், என்றும் அதனால் வளம் உள்ளது என்றும் அறியலாம்.

'பெருங்கடல்' நீந்துதற்கரிய பெரிய கழியில் இரையுண்டு வாழும் நெய்தல் நிலக்காக்கை மருத நிலச் சோலையில் வாழும்போது 'பூக்கமழ்' தலைச் செய்யும் என்பது சிறப்புப் பொருள். அதாவது நெய்தல் நிலப் பொருள் மருத நிலத்தில் வாழப் போகிறது.

சிறப்புக்குரிய தலைவிமேல் ஏற்றிச் சொல்லப்படும் அத்தொடர்யாது அதனால் 'சிறுவெண் காக்கை' அத்தொடரில் அமைந்துள்ள நயம் எண்ணி எண்ணி வியந்திடச் செய்வது. ஆதலால் அத்தொடரோடு 'அர்' விகுதியும் சேர்த்து "சிறுவெண் காக்கையார்" என்று கூறிப் பாடலைப் பாடியவர் 'சிறுவெண் காக்கையார்' எனக்கூறி அமையலாம்.

சாந்தினி ஏஜென்ஸீஸ்,

95, மேலாவனி மூலவீதி,

மதுரை.

போன்: 24409.

தொழிலுகங்களுக்கும், வீட்டு உபயோகத்திற்குமான Havells, C.P.L., Bosma, Glolete, Kesselac முதலிய எல்லாவிதமான மின்சாரப் பொருட்களும், MM ரப்பர் மெத்தைகள், தலையனைகள் முதலியனவும் விற்பனையாளர்கள்.

தோற்றம் : 1991 போன் : 868 / 204

ஆயிர வைசியர் கல்லூரி

கல்லம்பட்டி

(வழி)சத்திரப்பட்டி, மதுரை.

பயிற்றுவிக்கும் பாடங்கள்

B.SC., Maths, Physics, Computer Science,

Bio Chemistry, B.Com.

முதல்வர்

K. சுப்பையா.

தலைவர் : **T.M.A.K.** ராதாகிஷ்ணன்

செயலாளர் : **A.** சுந்தரராஜன்

தொல்காப்பிய இலக்கணமும் மொழியும்.

பேரறிஞர் பெ. சுயம்பு

முன்னுரை:

தொல்காப்பியம் தமிழ் இலக்கண நூல்களுள் தொன்மையும் சிறப்பும் உடையது. அந்நூல் விவரிக்கும் இலக்கணத்தினை அதன் காலத்தைய மொழியோடு ஒப்பிடுவதன் வழி, விளக்க நெறியை அறிந்து கொள்ள இயலும்.

எழுத்தியல்
ஐ, ஔ

ஐகாரம், ஔகாரம் குறித்துத் தனியெழுத்து, கூட்டெழுத்து எனும் இருவகைக் கொள்கைகள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன.

உயிரெழுத்துக்களின் வரிசையில் இவ்விரண்டையும் சேர்த்து இவற்றுக்கு மொழிமுதல், மொழியீறு, பிறப்பு, புணர்ச்சி போன்ற எழுத்திலக்கணத்தையும் தொல்காப்பியம் விவரிக்கிறது. இக்கருத்துக்கள் ஐகாரத்தையும் ஔகாரத்தையும் தனியெழுத்து என்று தொல்காப்பியம் கொள்வதைப் புலப்படுத்துகிறது.

அக்ரத்தோடு இகரம் அல்லது யகரம் சேர்ந்து ஐகாரமாகவும் (எ. 54, 56) அகரத்தோடு உகரம் சேர்ந்து ஔகாரமாகவும் எழுதப் பெற்றதற்கான குறிப்பும் (எ. 55) தொல்காப்பியத்தில் காணப்படுகின்றது. இக்குறிப்பிலிருந்து இரு எழுத்துக்களும் கூட்டெழுத்துக்களாகவும் கொள்ளப்பட்டமையை அறியலாம்.

தனி எழுத்துக் கொள்கை முந்தைய மரபிலக்கணங்களினது. மற்றையது இவ்விரு எழுத்துக்களையும் வடமொழிக்கு உரியன என்ற தனித் தமிழ்க் கொள்கையாகும்.[1] தனித் தமிழ் இயக்கம் பழந்தமிழரிடையேயும் இருந்ததை இங்கு உணரலாம்.

நுந்தை

நுந்தை எனும் சொல்லில் குற்றியலுகரம் மொழி முதலில் வருகிறது. அது முற்றியலுகரமாக ஒலிக்கப் பெற்றாலும் பொருள் வேறுபடாது. (எ.67, 68)

இக்கருத்து இருவகை உகரங்களும் தொல்காப்பியர் காலத்திலேயே இணைந்துவிட்டமையைக் காட்டுகிறது. இன்றைய பேச்சு வழக்கிலும் இரண்டுக்கும் வேறுபாடு காணப்படவில்லை. நுந்தை என்பதில் குற்றியலுகரம் முதலில் வரும் என்பதிலிருந்து, பேச்சு வழக்கில், 'உந்தை' எனும் வடிவம் பெற்றிருந்ததை உணரலாம். அவ்வாறாயின், முன்னிலைப் பெயர்களில் நகர இழப்பினைத் தொல்காப்பியக் காலத்தோடு இணைத்துக் கொள்ள இயலும். பேச்சு வழக்கில் உம், உன் போன்றவை இடம் பெற்றிருந்தன.[3] ஆனால் தொல்காப்பியம் எழுத்து வழக்கையும் முந்தைய இலக்கண மரபையும் ஏற்று, நகர இழப்பைக் கருத்தில் கொள்ளவில்லை.

யங், - ர்ங் - , - ழ்ங் -

யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து நுகரமொடு தோன்றும் (எ.29)

இவ்விதிக்கு வேய்ஙனம், வீழ்ஙனம் எனும் தொடர்களை இளம்பூரணர் எடுத்துக் காட்டுகின்றார். மொழிக்கு முதலாவதாக நுகரம் அக்காலத்து வழங்கியது என்று உணர்க. ஆசிரியர் ஓதுதலின் என்று நச்சினார்க்கினியர் இதனை விளக்குகின்றார்.

ஙனம் எனும் பலபொருள் ஒருசொல் சார்ந்தன்றித் தனித்து வராது என்று சிவஞானமுனிவர் குறிப்பிடுகின்றார்.[4]

'குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபிலவே' (எ.44) எனும் நூற்பாவில் சுட்டு (அ. இ. உ), வினா (எ) இடைச் சொற்கள் தனித்து வராமையால் சொற்களாக ஏற்கப் பெறவில்லை. ஔகாரம் இடைச் சொற்களின் பட்டியலில் சேர்க்கப் பெற்றிருந்தும் (சொ. 277) மொழியீற்றில் வராது என விலக்கப்படுகின்றது (எ. 69). இவை எல்லாம் சார்புச் சொற்களுக்குப் பெயர், வினை ஆகிய தனிச் சொற்களுக்கு இணையான இலக்கணத்தைத் தொல்காப்பியம் கூறவில்லை என்பதற்கான சான்றுகள்.

உரையாசிரியரின் சான்றுகளில் வரும் ஙனம் என்பதில் வரும் ஙகரம் மொழிமுதலில் வந்த போதிலும், இடைச் சொல்லாதலின் மொழிமுதல் எழுத்துக்களுடன் சேர்ந்து இலக்கணம் கூறவில்லை. ஆயினும் மெய் மயக்கத்துடன் வருதல் பற்றி இந்நூற்பாவைத் தொல்காப்பியம் கூற வேண்டியதாயிற்று.

இம்மயக்கச் செய்தி பிறிதொன்றையும் உணரத் தூண்டுகிறது. மாஙாய் (மாங்காய்). தேஙாய் (தேங்காய்) போன்ற வழக்குகள் மலையாளத்தில் உள்ளன.[5] இவ்வழக்குகள் தொல்காப்பியர் வாழ்ந்த வட்டாரத்திலும் இடம் பெற்றிருந்தன. அதன் தாக்கமாக இவ்விதி தோன்றியது எனலாம்.

புணரியல்

நாடுரி

நாழி எனும் சொல்லுடன் உரி என்பது சேரும்போது ழிகரம் கெட்டு, டகரம் தோன்றும் என்பது தொல்காப்பிய (எ. 241) விதி.

நாழி + உரி > நா + உரி நாட் + உரி > நாடுரி

உயிர்முன் உயிர் வரும்போது உடம்படுமெய் தோன்றுதலே புணர்ச்சியின் இயல்பு. ஆனால் தொல்காப்பியக் கருத்து முரணாக உள்ளது. நாழி என்பதிலுள்ள டிகரம் டகரமாகத் திரிந்து நாடி என்றாகி, உரியுடன் சேர்ந்து நாடுரி ஆனது என்று வேங்கடராசுலு ரெட்டியார் கூறுகிறார்.[6]

நாழி எனும் தமிழ்ச் சொற்கு இணையாக நாடி என்பது வடமொழியில் உளது.7 இச்சொல் வடமொழியைப் போற்றிய புலவர்களின் வழியே தமிழகத் திலும் வழங்கியதன் விளைவாக, நாடுரி எனும் தொடர் அமைந்தது. இத் தொடரையும் மக்களிடம் பயின்று வழங்கிய நாழி எனும் சொல்லையும் பொருள் ஒற்றுமை காரணமாகத் தொடர்பு படுத்திய தொல்காப்பியம், நாடுரி என்பதற்கு அடிப்படைச் சொல் நாழி என்று கொண்டு புனர்ச்சி விதியைக் கூறியிருக்க வேண்டும்.

புனர்ச்சித் தொடர்களைப் பிரித்து விவரிக்கும் அவா காரணமாக, தற்கால வழக்கில் பயிலுவனவற்றை அடிப்படைச் சொற்களாகக் கொண்டு புணர்ச்சி இலக் கணம் கூறி, இடர்ப்படும் முயற்சியை வேணவா, தொண்ணூறு, தொள்ளாயிரம் போன்றவற்றிலும் காணலாம். வேணவா எனும் தொடரைத் தொல்காப்பியகம் (எ. 239) வேட்கை அவா வேள் அவா வேணவா எனப் பிரித்து விளக்குகின்றது. இத்தொடரில் வேள் நவா எனும் இரு சொற்கள் இணைந்துள்ளன. நிலை மொழியின் ஈற்று ளகரம் வருமொழி நகரத்தின் ஆற்றலுக்குட்பட்டு, ணகரமாகியுள்ளது.

வேள், நவா எனும் இரு சொற்களும் மிகுந்த விருப்பத்தை உணர்த்துவனவாகும்.[8] நவா என்பது நவ்வுதல் (மிகுந்த விருப்பம்) என்ற சொல்லோடு தொடர்புடையது. இதுவே நாளடைவில் அவா என்றானது. தொல்காப்பியத்திற்கு மிக முந்தைய காலத்திலேயே நகர இழப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். எனினும் வேணவா எனும் தொடர் செய்யுட்களில் அருகிய வழக்காக இடம் பெற்றதால், தொல்காப்பியம் அதற்கு விதி கூறுகின்றது எனலாம்.

தொண்ணூறு, தொள்ளாயிரம், எனும் தொடர்களுக்கு உரிய அடிப்படை வடிவமான 'தொண்டு' அருகி வழங்கியதால்,8 அதனைத் தொல்காப்பியம் புணர்ச்சி விதி கூறுமிடத்துக் கருத்தில் கொள்ளவில்லை; பயின்று வழங்கிய ஒன்பதை அடிப்படைச் சொல்லாக ஏற்று, தொடர்களின் வடிம் அமையும் வகையில் புணர்ச்சி விதிகளைக் கூறுகின்றது.

சொல்லியல்

ஐ உருவு

இரண்டாம் வேற்றுமை உருவு ஐகாரம், பொதுத் திணைப் பெயர்களின் வெளிப்படையாக வரும் என்பது தொல்காப்பிய இலக்கணம். (எ. 158) ஆனால் தொல்காப்பிய நூற்பாவில் இவ்விரு பெயர்களில்' மறைந்து வருதலும் காணப்படுகின்றன. [10]

மறைந்தவற் காண்டல் தற்காட் டுறுதல்(பொ.111)

பகர விகுதி

தொல்காப்பிய (சொ. 7) இலக்கணம் பகர விகுதியைப் பலர் பாலுக்கு உரியது எனக் கூறுகின்றது. ஆனால் அதன் நூற்பாவில் பலவின் பாலிலும் இடம் பெற்றுள்ளது.

எழுத்தெனப் படுப (எ. 2)

இங்கு பலவின் பாலுக்குரிய வகர விகுதியே செய்யுளின்பம் நோக்கிப் பகரமாக ஒலிமாற்றம் பெற்றுள்ளது என்று உரையாசிரியர்கள் கூறுகின றனர். இக்கருத்து நூலாசிரியரைக் காப்பாற்றும் முயற்சியே அன்றி, ஏற்புடையதன்று.

இவ்விகுதியில் பகரம் காலத்தை உணர்த்துவதாகக் கொண்டால், அகரமே பன்மையைச் சுட்டுவதாக அமையும்.[11] அவ்வாறாயின், பலவின் பாலுக்குரிய அகர விகுதி பலர் பாலிலும் வழங்கிய நிலையில், இரு பால்களையும் பிரித்துக் காட்டும் முயற்சியாகக் கால உருபனையும்(ப்) பன்மை விகுதியையும் (அ) சேர்த்துப் பகர விகுதி என்று கொண்டனர் எனலாம். தொல்காப்பியமும் முந்தைய இலக்கண மரபைப் பேணுகின்றது.

தொடரியல்
எழுவாய் - பயனிலை

தொடரில் எழுவாயும் பயனிலையும் ஒத்த திணை, பால், எண், இடம் உடையனவாக இருத்தல் வேண்டும் என்று தொல்காப்பியம் (சொ.1) கூறுகின்றது. ஆனால் அதன் மொழியில் எழுவாய் பன்மையாகவும் பயனிலை ஒருமையாகவும் காண முடிகின்றது.

> அத்தும் இன்னும் உறழத் தோன்ற ஒத்தது (எ. 194)
> அன்று வருகாலை ஆவாகுதலும்
> ஐவரு காலை மெய்விரைந்து கெடுதலும்
> செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப (எ. 259)
> கொண்டு தலைக்கழிதலும் பிரிந்தவண் இரங்கலும்
> உண்டென மொழிய ஓரிடத் தான (பொ. 15)

அஃறிணைப் பன்மைப் பெயர்கள் ஒன்றன் பால் வினையை ஏற்கும் தொடரமைப்பே இன்றைய பேச்சு வழக்கில பெரிதும் பயில்கின்றது. இவ்வியல்பு தொல்காப்பியர் காலத்தும் மக்களிடையே இருந்தது. ஆயினும் எழுத்து வழக்கை ஏற்றுத் தொல்காப்பியம் இதனை விளக்கியுள்ளது.

வியன்கோள்

> முன்னிலை தன்மை ஆயிரிடத்தொடு
> மன்னாதாகும் வியங்கோட் கிளவி (சொ. 221)

இவ்விதிக்கு மாறாகத் தொல்காப்பிய மொழியில் வியங்கோள் தன்மையிலும் முன்னிலையிலும் வழங்குகின்றது.12

இன்னதுபிழைப்பின் இதுவா கியரென (பொ. 79) தன்மை
செல்லாக் காலை செல்கவென விடுத்தலும்(பொ.147)
முன்னிலை

இங்கும் தொல்காப்பியம் தன்கால மொழி வழக்கை விடவும் முந்தை இலக்கண விதிகளுக்கு முன்னிலை கொடுத்து இலக்கணம் கூறுவதாகக் காணலாம்.

முடிவுரை

தமிழில் பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும் வெவ்வேறானவை. தொல்காப்பியம் எழுத்து வழக்கை ஏற்று, முந்தைய இலக்கண நூல்களின் கருத்துகளுக்கு முன்னுரிமை கொடுத்து இலக்கணம் கூறுகின்றது. இன்றைய பேச்சு மொழியில் உள்ள பல கூறுகள் தொல்காப்பியர் காலத்திலேயே இடம் பெற்றிருந்தன.

குறிப்புகள்

1. இரு கொள்கைகளுக்கும் இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன.
மயல் (புறானூறு 3), மையல் (புறநானூறு 7)
அவ்வை (சீவகசிந்தாமணி 1046), ஔவையார் (சீவகசிந்தாமணி 2637)

2. இரா. பாலகிருஷ்ணன் (1984), ப. 275.

3. இச்சொற்களை இலக்கியங்களில் காணலாம்.
அகநானூறு (56, 222), திணை மொழி ஐம்பது (36), நாலடியார்(94)

4. இலக்கண விளக்கச் சூறாவளி.

5. இவற்றில் வருகின்ற ஙாய் என்பது புணர்ச்சியால் தோன்றிய சார்பு சொல்லாகும்.

6. சொல் - எழுத்ததிகார ஆராய்ச்சி

7. R. Caldwell (1951) P. 10

8. DED 2947, 4548.

9. தொல்காப்பியம் பொ. 406 மலைபடுகடாம் 21, பரிபாடல் 3.

10. ஐகார உருபு மறைந்து வருதலை இலக்கியங்களிலும் காணலாம். ஓரி கொன்று சேரலர்க் கீத்த (அகநானூறு 209), மல்லர் கடந்தான் (ஐந்திணை ஐம்பது 1)

11. பகரம் எதிர்காலம் உணர்த்தும்: M. Israel, (1973) P.151

12. இலக்கியங்களில் தன்மை, முன்னிலையிலும் வியங்கோள் இடம் பெற்றுள்ளது.

யான்ஈ ஆயர்நின் நெஞ்சுநேர் பவளே (குறுந்தொகை 49)

வாழிய நீ (அகநானூறு 92)

துணை நூல்கள்

1. ஆக. சிவலிங்கனார் (பதி) தொல்காப்பிய உரைவளம் (நூல் மரவு, மொழிமரவு, உயிர் மலங்கியல்) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென னை.

2. இளம்பூரணர் தொல்காப்பியம் - சொல்லதிகாரம் கழக வெளியீடு, சென்னை, 1963.

3. தொல்காப்பியனார், தொல்காப்பியம்
நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
சென்னை,1981.

4. வேங்கடராசுலு ரெட்டியார்.வே, தொல். எழுத்ததிகார
ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைகழகம், 1944.

5. பாலகிருஷ்ணன்.இரா. 'குற்றியலுகரம் இன்று தேவையா?'
ஆய்வுக்கோவை, தொகுதி 2, 1984.

6. Caldwell, Robert, A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages,University of Madras - 1961.

7. Israel,M., The Treatment of Morphology in Tolkappiyam, Madurai University - 1973.

8. Natarajan,T., The Language of Sangam Literature and Tollkappiyam, Madurai Publishing House, Madurai, 1977.

9. Athithan.A., Linguistic structure in Tamil - A Historical Study. Madurai Kamaraj University, 1989.

10. Burrow,T., and Emenean,M.B., A Dravidian Etymological, Dictionary, Oxford University Press,1961.

அறிவியல் நூல் பதிப்புகள்

பேரறிஞர் ச. கிருட்டிணமூர்த்தி.

இக்கட்டுரை நூல் பதிப்புகளைப் பொதுநிலையில் நின்று ஆய்ந்து அவற்றின் இன்றியமையாமையைக் கூற முற்படுகிறது.

மக்களுள் எழுத்தறிவுடையோர் பெருகப் பெருக நூல்களைப் படிக்கும் ஆர்வமும் திறனும் பெருகிக் கொண்டே இருக்கும். எழுதப் படிக்கத் தெரிந்தவர் முதல் ஆய்வை நிகழ்த்தும் ஆய்வாளர் வரை அனைதது்த் தரப்பினர்க்கும் அறிவைப் புகட்டும் ஆசானாக விளங்குவது நூலாகும். எனவேதான் **"Book is a teaching machine" (H.L.N. Bharathi, P. 75)** என்று கருத்துரைப்பர். சுவடி, ஏடு, பொத்தகம், புத்தகம், நூல் போன்ற சொற்கள் பொருண்மையளவில் ஒரு தன்மையனவே. நூல் படிக்கும் தன்மையென்பது கல்விநிலை, அனுபவநிலை என்ற இரண்டன் அடிப்படையில் வேறுபடக்கூடும்.

இந்நூல் உருவாக்கத்தைப் பதித்தல், பதிப்பித்தல், என்றும் உருவாக்கப்பட்ட நூலைப் பதிப்பு என்றும் கூறுவர். பதிப்பித்தல் நோக்கில் பதிப்பை,

1. சுவடிப்பதிப்பு
2. நூற்பதிப்பு

என இரண்டு வகையில் பகுக்கலாம். இவ்விரண்டு வகைப் பகுப்புகளும் பொருண்மை, செயன்மை அடிப்படையில் பலவகைப்பாடுகளுக்குரியன என்றாலும் இவ்விரண்டையும் பொதுவகைப்பாடாகக் கொள்ள முடியும். அறிவியல் நூற

பதிப்பைப் பொறுத்தவரை, இதனை இவ்விரண்டு வகைப்பாடுகளின் கீழும் கொண்டு வரலாம். சுவடி அறிவியல் துறைபற்றியதாக இருந்து, அது நூல் வடிவம் பெறும் நிலையிலும், அறிவியல் நூல் உருவாக்கப்படும் நிலையிலும் முறையே அவ்விரண்டு வகைமைகளும் வெளிப்படுதல் கொண்டு மேற்கருத்தை உறுதி செய்யலாம். சுவடிப் பதிப்பாயினும் நூற் பதிப்பாயினும் அவற்றிலிருந்து வெளிவரும் படைப்புகள் பல்வேறு முறை சார்ந்தனவாக அமைகின்றன. பதிப்பு முறைகளைக் கொண்டு இப் படைப்புகளை உற்று நோக்கும் பொழுது சுவடிப்பதிப்பிற்கும் நூற்பதிப்பிற்குமாகத் தனித்தனிப் பதிப்பு முறைகளை நாம் பகுத்துக் காண முடியும். எனவே தனித்த பதிப்பு நெறிகளை உள்ளடக்கிய ஒவ்வொரு படைப்பையுமே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். "Every book is a new product" (Mohal Primlani, P. 55) என்று இதனைப் பிறரும் கருத்துரைப்பதையும் நாம் காணலாம்.

தேவையைக் கருதிய நிலையில் வெளிவருகின்ற புதிய புதிய படைப்புகள் யாவும் நூல்களின் பெருக்கத்திற்கும் துணைபுரிந்து வருகின்றன. ஆயினும், இவையனைத்தும் இன்றைய வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றத்திற்கு ஈடு கொடுக்கும் அளவிற்கு வெளிவரவில்லை. ஏனெனில் வாழ்வியல் நூல்கள் வெளிவரும் அளவிற்கு அறிவியல்கள் நூல்கள் வெள்ிவரவில்லை என்பதை கல்வியாளர் அனைவரும் இப்பொழுது உணர்ந்துள்ளனர். இதற்குப் பல காரணங்களைக் கூற முடியும்.

1. அறிவியல் நூல்களைப் பதிப்பித்தல் என்பது புதிய முறை.
2. மொழிப் பிரச்சினை.
3. வாங்கும் திறன் பற்றிய ஐயம்.

இவை போன்று பல்வேறு காரணங்கள் இன்றைய அறிவியல் நூல் பதிப்பில் தேக்கத்தை ஏற்படுத்தி இருப்பதால் அறிவியல் வளர்ச்சியை ஒவ்வொரு மொழிக்கும் கொண்டு வருவதில் பெரும்தடையும் ஏற்பட்டிருக்கிறது.

அறிவியல் நூல்களைப் பதிப்பித்தல் என்பது புதிய ஒன்று

இந்திய மொழிகளைப் பொறுத்தவரை அறிவியல் நூல்களைப் பதிப்பித்தல் என்பது புதிய முயற்சியாகவே கருதப்படுகிறது. அறிவியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்புதான் இந்நூல்களின் தேவையும் இங்கு ஏற்பட்டது எனலாம். பாடப்புத்தகத் தேவை காரணமாக அறிவியல் நூல் பதிப்புகளின் முயற்சி மேற் கொள்ளப்பட்டது. எனினும் அந்நூல்களைப் பதிப்பிக்கும் நெறிமுறைகள் புதியனவாகவே இருந்தன.

> "The concept of publishing scientific and technical books is still new to both authors and publishers in India" (Mohan Primlani, P. 52)

இந்நிலையைப் பற்றிய கருத்துக்களும் குறிப்பிடத்க்கனவாகும். முதற்கட்ட நிலைகளில் அறிவியல் நூல்களை வெளியிடுவதில் மொழிச் சிக்கல்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் தாய்மொழி வழிக்கல்வியின் இன்றியமையாமை உணரப்படாத நிலையில் ஆங்கில வழி நூல்களைக் கொண்டு வருவதில் பதிப்பு முறைகளை அறிந்து அதற்கேற்ப அறிவியல் நூல்களைப் பதிப்பிக்க வேண்டிய நிலை ஏறப்பட்டது. எனினும் மேலை நாட்டு அறிவியல் நூற்பதிப்புகளோடு இணயாகச் செல்லக்கூடிய நிலை இந்திய அறிவியல் பதிப்புகளிடையே ஏற்படவில்லை என்று பலரும் கருத்துரைக்கின்றனர். சான்றாக,

> "India's scientific and technical books are still not at par with international standards" (Mohan Primlani, P. 54)

என்பதைக் கூறலாம். இந்நிலை 80-களில் நிலவியது என்று கருதலாம். 1990க்குப்பிறகு இந்நிலையில் சற்று மாற்றம் ஏற்பட்டு மேலைநாட்டு நூல் பதிப்புகளுக்கு இணையாக நூல்களைப்

பதிப்பிக்கும் பணியில் இந்தியப் பதிப்பாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதற்குக் காரணம் புதிய தொழில் நுட்பக் கூறுகளைக் கொண்ட அச்சுப் பொறிகளின் வருகையேயாகும்.

1. Lithography.
2. Photo - lithography.
3. Collotype.
4. Offset.
5. Photo gravure.
6. Silk screen method.
7. Computer Word Processor.
8. Electronic Typewriting.
9. Laser Printing.

(H.L.N. Bharati, 1988)

போன்ற தொழில் நுட்பங்களின் வளர்ச்சி இக் காலகட்டங்களில் மேலோங்கி இருந்ததால் அறிவியல் நூல்களின் பதிப்பு முறைகளையும் நுட்பங்களையும் இந்தியப் பதிப்பாளர்கள் மேற்கொண்டு நூல்களை வெளியிடும் திறனைப் பெறத் தலைப்பட்டனர். இதனால் சிறந்த அறிவியல் நூல்கள் வெளிவந்தன.

மொழிப் பிரச்சினை

பயிற்று மொழிச் சிக்கல் உருவாகியதற்கு அடிப்படைக் காரணமே அந்தந்த மொழிகளில் அறிவியல் நூல்கள் இல்லாமையாகும். கல்கத்தாவில் Socila Book Society நிறுவப்பட்டு தாய்மொழி வழிக் கல்வி முறை மேற்கு வங்கத்தில் கொண டு வரப்பட்ட காலம் முதல் தாய்மொழி வழி க் கல்வியின் மீதாகிய ஆர்வம் நாட்டில் பெருகத் தொடங்கியது. தமிழ்நாட்டில் 1930களில் தாய்மொழி வழிக் கல்லி அறிமுகப்படுத்தப்பட்டது. பிறகு கல்லூரிகளிலும் அது நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்காரணமாக ஆங்கிலம் மற்றும் தாய்மொழி வழி அறிவியல் தொழில் நுட்ப நூல்களின் தேவை ஏற்பட்டது. 1985 ஆம் ஆண்டு வரை உள்ள கணக்கின்

படி 114 மில்லியன் மாணவர்கள் கல்வி பயின்று வந்தனர். அவர்களுள் 110 மில்லியன் மாணவர்கள் பள்ளிகளிலும் 4 மில்லியன் பேர் கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களிலும் பயின்றனர். அவர்களுள்ளும் பணி சார்ந்த மற்றும் அறிவியல் தொழில் நுட்ப பாடங்களைப் பயின்ற, அதிக எண்ணிக்கையிலான மாணவர்களுக்குரிய பாடப்புத்தகங்களின் தேவை 1983 இல் அதிகரித்திருந்தது. இவர்களுள்ளும் தாய்மொழி வழி அறிவியல் கல்வியைப் பயிலும் மாணவர்களுக்குரிய பாடப்புத்தகங்களின் தேவை மேலும் அதிகமாகியது. 1935 இல் தொடங்கப்பட்ட பாடநூலாக்கம் இந்தியாவின் பல மாநிலங்களிலும் செயன் முறைக்குக் கொண்டு வரப்பட்டது. இதனடிப்படையில் 1985ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி அஸ்ஸாம் 247, மேற்கு வங்காளம் 27, குஜராத் 705, கேரளா 850, மராத்தி 250, பஞ்சாபி 231, தமிழ் நாடு 864, ஆந்திரா 312 என்ற அளவில் மாநில மொழிகளில் நூல்களை வெளிக் கொணர்ந்திருக்கின்றன. அவற்றுள்ளும் தமிழகமே அதிகமான நூல்களைத் தமிழில் கொணர்ந்த பெருமையைப் பெறுகின்றது. தமிழகத்தில் தமிழ் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் போன்றவை அரசின் நிதி உதவியைப் பெற்றும், தத்தம் திட்ட ஒதுக்கீடுகள் மூலமும் அறிவியல் நூல்களைத் தமிழில் கொணரும் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன.

பாடப்புத்தகங்களின் தேவை மட்டுமல்லாமல் தமிழ்வழி அறிவியல்பொது நூல்களின் தேவையும் இன்று அதிகரித்து வருகின்றது. ஒரு முறை தில்லிபொது நூலகத்தினர் ஒரு கள ஆய்வை மேற்கொண்டனர். இளைஞர்களிடையே நூல் படிக்கும் ஆர்வம் எப்படியிருக்கின்றது என்பது பற்றிய அக் கள ஆய்வில் ஒரு வியத்தகு முடிவை அவர்கள் கண்டார்கள்.

1. அறிவியல் நூல்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்
2. தத்தம் தாய்மொழிகளில் அதனைப் படிக்க விரும்புகின்றனர்.
3. இதனால் தாய்மொழி வழி அறிவியல் நூல்கள் போதிய அளவில் கிடைக்கவில்லை. (Vishvanath, P. 86)

இம் முடிவுகளை நோக்குகின்ற பொழுது அறிவியல் நூல் பதிப்புகளின் தேவையை நாம் நன்குணரலாம்.

பாடநூல் உருவாக்கமாயினும் அல்லது புதிய அறிவியல் நூலாக்கமாயினும் அவை தாய்மொழி வழி உருவாக்கப்படும் பொழுது பல இன்னல்கள் ஏற்படுவது இயற்கை. நூல்களைப் புதியதாகப் படைக்கும் மொழித்திறன் படைத்த ஆசிரியர்கள் இப்பணிக்குத் தேவைப்படுகின்றனர். மொழிபெயர்த்துச் செய்யப்பட வேண்டுமெனில் இருமொழிப் புலமை சான்றவர்களாகவே அவர்கள் இருக்க வேண்டும். நூலை உருவாக்கும்பொழுது உருவாக்கப்பட வேண்டிய மொழிக்குரிய கலைச் சொற்களை ஆக்கிக் கொள்ளும் திறனும் அவர்களுக்குத் தேவைப்படுகின்றது. அல்லது முன்பே உருவாக்கப்பட்டுத் தரப்படுத்தப்பட்ட கலைச்சொல் பட்டியலை அவர்கள் பின்பற்ற வேண்டியதிருக்கின்றது. நூலை யாருக்காகப் படைக்கிறோம் என்பதை அறிந்து அவர்க்கேற்ற மொழிப் பயன்பாட்டைக் கருத்திற் கொண்டு அந்நூலை அவர்கள் உருவாக்க வேண்டும். இவை அனைத்திற்கும் மேலாக அந்நூல் ஏற்ற பதிப்பு முறையோடு அச்சிடப்பட்டு வெளியிடப்பட வேண்டும். மற்ற நூல்களைப் போலல்லாமல் அறிவியல் தொழில்நுட்ப நூல்களைப் பதிப்பிக்கும் பொழுது அதிக கவனமும் அக்கறையும் விழிப்புணர்வும் பதிப்பாளர்களுக்கு வேண்டும் என்று கூறுவர்.

வாங்கும் திறன் பற்றிய ஐயம்

ஒரு நூலைப் பதிப்பிக்கும் பொழுது இந்த நூல் எந்த அளவிற்கு விற்பனையாகும் என்னும் விற்பனைத் தரத்தைப் (Market Value) பற்றி ஆய்ந்து முடிவு செய்ய வேண்டியது பதிப்பாளர் கடமையாகும். அவ்வகையில் அறிவியல் நூலைப் பதிப்பிக்கும் ஆசிரியர்கள் அதுபற்றி ஐயப்படுவது இயற்கையே.

நூல் வெளியீட்டைப் பொறுத்தவரை இந்தியா உலக நாடுகளிடையே ஆங்கில நூல் வெளியீட்டில் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. ஆண்டொன்றுக்கு ஆங்கிலத்திலும்

இந்திய மொழிகளிலுமாக சுமார் 20,000 தலைப்புகளில் நூல்கள் வெளிவருகின்றது. ஆயினும் நூல்களை வாங்கும் திறன் குறைவாக இருக்கின்றது என்று கருதுகின்றனர். (P.S. Bhatti, P. 22)

அறிவியல் நூல்களைப் பொறுத்தவரை அவற்றிலும் மாநில மொழிகளில் வெளியிடப்படும் நூல்கள் மக்களின் வாங்கும் திறனுக்கேற்பக் குறைந்த விலையில் வெளியிடப்பட வேண்டும். குறைந்த விலையிலான மலிவு விலைப் பதிப்புகள் வெளிவர வேண்டும். குழந்தைகளுக்கான நூல்களும் (Children's Books), பொதுமக்களுக்கான நூல்களும் (Popular Editions) குறைந்த விலையில் நிரம்பவும் பதிப்பிக்க பெறவேண்டும்.

மேற்கூறப்பட்ட கருத்துக்கள் மூலம் அறிவியல் நூல் பதிப்புகளின் நிலையையும் அவற்றின் இன்றைய இன்றியமையாமையையும் நன்கறியலாம்.

துணை நூல்கள்

1. Selected Papers. Volume 2, Sunithi Kumar Chatterji, Peoples Publishing House, New Delhi, 1979.
2. Indian Publishing then and now, Compiled by P.S. Bhatti, S.Chand & Company (Pvt.)Ltd., NewDelhi.
3. Indian Publishing Since Independence, Edited by D.N.Malhotra, Narendra Kumar, The Bookman's Club, Delhi, 1980.
4. An Introduction to Indian Textual Criticism and Modern Book Publishing HLN Bharati, Central Institute of Indian Languages, Mysore, 1988.
5. The Future of the Printed Word, Edited by Philip Hills, The Open University Press, Milton Keyness England, 1981.

மூப்பியல் பார்வையில் 'குடும்ப விளக்கு'

டாக்டர் பத்மா சீனிவாசன்
இணைப் பேராசிரியர்
ஆங்கிலம், ஒப்பிலக்கியத்துறை
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை 625 021.

முதுமையென்பது மனித வாழ்வில் தவிர்க்க முடியாத பருவம். இது மகிழ்ச்சியற்றதாக இருக்கத் தேவையில்லை; அன்பு நிறைந்த அமைதியான வாழ்க்கையாக இருக்க முடியுமென்று தன்முனைப்பாளர்கள் (Ego Psychologists) உறுதியாகக் கூறுகிறார்கள். சூழ்நிலை இசைவின்மைக் காரணமாக, தன்னுடையத் தன்முனைப்பை (Ego) ஒழுங்குபடுத்த் தவறிய ஒரு மனிதன் முதுமையில் மிகத் துன்பமடைகிறான். மாறாக, சூழ்நிலை இசைவினால், அவன் மூப்பினால் துன்புறுவதில்லை. இத்தகையை பண்புகள் நிறைந்த, மன ஆரோக்கியம் உள்ள முதுமைத் தம்பதியரைப் பாரதிதாசன் குடும்ப விளக்கின் 'முதியோர் காதல்'[1] பகுதியில் சித்தரிக்கிறார். முதுமைக் காதல், மணவழகர் - தங்கம் தம்பதிகளின் மூலம் பேசப்படுகிறது. இம் முதுமைக் காதலை ஆராய்வதற்கு முன், மூப்பியலாளரின் கருத்துக்கள் என்ன, என்று பார்ப்பது அவசியமாகும்.

மனிதனின் முதுமைப் பருவ நடவடிக்கைகளை ஆராய்வதே, 'மூப்பியல' (Geropsychology) ஆகும். இதைப் பற்றி உளப்பகுப்பாய்வாளர்கள் இடையே வேறுப்பட்ட கருத்துக்கள் உள்ளன. மனிதனின் மன வளர்ச்சி முழுவதும் குழந்தைப் பருவத்திலேயே முடிவடைந்து விடுகிறது. அதனுடைய முரண்பாடுகளே முதுமைப் பருவத்தில் வெளிப்படுமென்று ஃப்ராய்ட் கூறுவார். ஆனால் எரிக் எரிக்சன் என்பாரோ, மனிதனுடைய மன வளர்ச்சி அவனுடைய வாழ்க்கை முழுவதும் தொடரும் என்ற கருத்தினைத் தெரிவிக்கிறார். கம்மின், ஹென்றி போன்றவர்கள் சமுதாயக் கடமைகளிலிருந்து ஒரு மனிதன் தன்னை முழுவதுமாக விலக்கிக்

கொள்ளுவதே முதுமையின் வெற்றியாகும் எனக் கருதுகின்றனர். மாடக்ஸ் என்பவர், ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடுவதே மூப்பற்ற முதுமையின் (Old age without senility) இரகசியம் எனக் கூறுவார்.[2] இவர்களின் தன்முனைப்புப்பற்றியும், ஆளுமை வளர்ச்சி (Personality development) பற்றியும் எரிக்சன் மிக விரிவான ஆய்வுகளைச் செய்திருக்கிறார்.

முதுமையென்பது ஒரு அருவருக்கத் தக்க சாபம் என்பது பொதுவான கருத்து. வயதானவர்கள் தங்களைச் சுற்றி ஒரு வேலியை அமைத்துக் கொண்டு நத்தை தன் கூட்டிற்குள் தன்னை இழுத்துக்கொள்வது போல், தங்களுக்குள்ளே உறைந்து போக முற்படுவார்கள். தனித்துப் போகும் இவர்கள் முன்னுக்குப் பின் முரணான செய்கைகளில் ஈடுபடுவார்கள். இவர்களுக்கும் சமுதாயத்திற்குமுள்ள தொடர்புகள் குறுகிக் கொண்டே போய், இறுதியில் அறுந்தே போய்விடுகின்றன. பொறுமையும் மற்றவர்களுடன் இணைந்து போவதும் குறைந்து, சிறு நெருக்கடிகளுக்குக் கூட ஆத்திரப்படத் தொடங்குவார்கள். இவர்களது அன்றாட வாழ்க்கையில் சிறிய மாறுதல் வந்தால் கூட இவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. இவர்களது சிந்தனை, இவர்களைப்பற்றியே இருக்கும். தங்களுடைய உடல் நோயைப் பற்றிச் சொல்லி அங்கலாய்த்துக் கொள்வார்கள். ஞாபகசக்திகுறைதல், அறிவு மழுங்குதல், அசுத்தமாக இருத்தல், நியாயமற்ற பேச்சுக்கள், கோபதாபங்கள், குழப்பமான சிந்தனைகள் - இவைகள் முதுமைப் பருவத்தில் காணப்படும் சில பொதுவான தன்மைகள். இம்மாதிரியான போக்குகளிலிருந்து முதுமையிலும் ஒரு மனிதன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முடியுமென்று எரிக்சன் உறுதியாகக் கூறுகிறார்.

இதில் குடும்ப உறவு என்பது இன்றியமையாதது. குடும்பம் என்பது கடந்த காலத்தையும் வருங்காலத்தையும் இணைக்கும் ஒரு பாலமாகும். அதுவே, ஒரு குழந்தைக்கு ஆரம்ப காலச் சமுகக்குழு அவனுடைய தன்முனைப்பு வளர அவன்

குடும்பத்தைச் சார்ந்திருப்பது குறைந்து கொண்டே வருகிறது. உறவுகளின் பிடிப்புகளும் தளருகின்றன. வளர்ந்த மனிதன் தன் குழந்தைகளின் மூலம் குடும்பத்தை வளர்க்கிறான். புதிய பாசங்களையும் உறவுகளையும் உருவாக்கிக் கொள்கிறான். இந்த உணர்ச்சிப் பிணைப்பில் பல இன்னல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். அவற்றின் தாக்கங்கள் முதுமையையும் மிகவும் பாதிக்கும். இதை எதிர் நோக்கி நடுப்பிராயத்திலிருந்தே சூழ்நிலை இசைவுக்குத் தன்னைத் தயார் செய்து கொள்ளும் ஒரு மனிதன் மூப்பு அவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் துன்புறுத்துவதேயில்லை என எரிக்சன் ஆணித்தரமாக விவாதிக்கிறார்.

இம்மாதிரியான மனிதன் ஆரோக்கியமான தன்முனைப்பை உடையவன்; தான் வளர்த்துக் கொண்ட ஆளுமைப் பண்பாட்டை, மிகச் சுலபமாக இவனால் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள முடிகிறது. பல சமூக உறவுகளை, திறந்த மனத்துடனும், தியாக உணர்வுடனும், நேச மனப்பான்மையுடனும் உண்டாக்கிக்கொள்ள முடிகிறது. இவ்விதமான வலுவான தன்முனைப்பின் மற்றொரு இன்றியமையாத ஆதாரம், ஒரு நபர் தன்னுடைய துணையுடன் கொள்ளும் ஆழமான நட்பும் தடையில்லாத கருத்துப் பரிமாற்றங்களும் ஆகும். சிதறாத தன்முனைப்பும் ஆளுமை வளர்ச்சியும் இணைந்து செயல்படும்போது, முதுமை ஒரு பளுவற்ற / பாரமற்ற பாருமாகக் கழிகிறது. இத்தகைய முதியவர்கள் மனச்சிதைவுக்கு ஆளாகமாட்டார்கள். சமுதாயத்திலிருந்து விலகிக் கொள்ளவும் மாட்டார்கள். மிக அமைதியாக இருப்பதோடு இன்னமும் தங்கள் வாழ்க்கைக்குப் பொருளிருக்கிறதென்ற முறையில், ஏதாவதொரு செயலில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள், தாங்கள் தனிமையாகி விட்டோமென்ற உணர்வோ, இறப்புப்பற்றிய அச்சமோ இவர்களுக்கு இருப்பதில்லை. இறுதிநாள்வரை, தங்கள் தன் முனைப்பைச் சிதற விடாமல் உறுதியாக வைத்துக் கொள்வதே இவர்களின் குறிக்கோளாக இருக்கிறது. இவர்களைப் புரிந்துகொண்ட வாழ்க்கைத் துணைகளின் உதவியோடு இந்தக் குறிக்கோளை எளிதாக அடைகிறார்கள். தன்னிறைவான,

நெருக்கமான மன இணைப்பே ஆழ்ந்த காதலாக உருவெடுத்து, இறப்பென்ற இன்றியமையாத நிகழ்ச்சிக்கு அவர்களை அமைதியாக இட்டுச் செல்கிறது. வாலிபப் பருவத்திருந்தே தன்னைச் சுற்றியுள்ள சமுதாயததிற்குத் தகுந்தபடி தன்னை மாற்றிக்கொள்ளும் இயல்புடையவர்கள், முதுமைப் பருவத்தையும் ஆரவாரமின்றி ஏற்றுக் கொள்வார்கள், என்பது மூப்பியலாளர்களின் பொதுவான கருத்து. இதையே பாரதிதாசனும் தன்னுடைய *குடும்ப விளக்கின்* வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

பாரதிதாசனின் *குடும்ப விளக்கின்* நிறைவுப் பகுதி 'முதியோர் காதல்' ஆகும். அதுவே, ஆதர்ச தம்பதியரான மணவழகர் - தங்கம் ஆகியோரின் எளிய, அமைதியான வாழ்க்கையின் நிறைவுப்பகுதியுமாகும். இத்தகையோரின் "குடும்ப முன்னேற்றமே, நாட்டின் முன்னேற்றம்" என்று கவிஞர், *குடும்ப விளக்கு* முதற்பகுதியின் முன்னுரையில் கூறுகிறார். அவர் மேலும் கூறுவார், "முன்னேற்றம் உடைய குடும்பம் எப்படி இருக்கும் என்பது பற்றிய என் எண்ணந்தான் இந்தச் சிறிய நூல். நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் . . . . கற்றலும், அதற்குத்தக நிற்றலும் நிறைய அமைந்திருக்க வேண்டும், துணைவியிடத்தும் கணவனிடத்தும்."[6] இக்குடும்பத்தின் விளக்கு தங்கம் என்ற பெண்மணி. அவளை அச்சாணியாக வைத்து இக்குடும்பம் சுழலுகிறது. 'தங்கத்தையும் அவளது கணவன் மணவழகரையும், வாலிபப்பருவத்தைக் கடந்த நடுப்பிராயத்தை நோக்கிச் செல்லும் தம்பதியராகக் கவிஞர் அறிமுகப்படுத்துகிறார். இவர்கள் வாழ்க்கையில் 'ஒருநாள் நிகழ்ச்சி', கவிதையின் முதற்பகுதியாகிறது. அதிகாலையில் தொடங்கும் ஆரவாரமற்ற தங்கத்தின் வாழ்க்கை, இரவில் அமைதியாக முடிகிறது. மங்கை துயிலெழும்போது "தூக்கத்தோடு தூங்கியிருந்த /ஊக்கமும் சுறுசுறுப்புள்ளமும்"[7] இருகைவீசி எழுகின்றன. அவள்தான் எத்தனை வேலை செய்கிறாள்? அதிகாலையில் வாயில் தெளித்து, கோலமிடத் தொடங்குவதிலிருந்து அவள் நிற்பதும் இல்லை, ஓய்வெடுப்பதும் இல்லை. கணவனருகே வந்து உடல் ஓய்வு பெறும் வேளையில்கூட, அவள் உள்ளம் ஓய்வு பெறுவதில்லை.

அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்
அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்பதல்லால்
இதுவரைக்கும் பொதுநலத்துக்கென்ன செய்தோம்?[8]

என்ற கேள்வியைக் கணவனிடத்தில் கேட்டு, குடும்பப் பொறுப்பு மட்டுமின்றிச் சமுதாயப் பொறுப்பும் தங்களுக்கு உண்டு என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். தங்கத்தின் கணவனும் அவளுக்குக் குறைந்தவனல்ல. திங்கட்கிழமை தோறும், தமிழ்க் கழகத்தார் கடையில் வந்து, படிவசூல் செய்து போவதை மனைவியிடம் கூறுகிறான். மகிழ்ச்சி கொண்ட மங்கை, 'எப்படிக்கும் முதற்படியாய் தமிழ்ப்படிக்க வேண்டும்'[9] என்று கூறும் பொழுது கவிஞரின் தமிழ்க் காதலும் வெளிப்பாடு அடைகிறது. தமிழின் பத்துடன் தெவிட்டாத இல்லற இன்பமும் சேர நலம்பாடி இரவு செல்கிறது. இம்முதற்பகுதியிலும் முதியவர்கள் வருகிறார்கள். தங்களுக்குள் சண்டையிட்டுக்கொள்ளும் இவர்கள் மருமகளிடத்தில் மிக்க அன்பு கொண்டவர்கள், அவளால் பேணிப் பாதுகாப்புப் பெற்றவர்கள். நோயுற்ற மாமனை அன்புடன் கவனித்து, அவருக்கு மருந்தளித்து, தங்கம் ஒரு சிறந்த மருத்துவச்சியாகவும் அவரைக் காக்கிறாள். இந்த ஒரு நாள் நிகழ்ச்சியில் விருந்தினர் வரவில்லையாததால், *குடும்ப விளக்கின்* இரண்டாம் பகுதி 'விருந்தோம்பல்' ஆக மலர்கிறது. இதன் முன்னுரையில், பாரதிதாசன், "முதற்பகுதியின் நிகழ்ச்சிக்கும் இந்நிகழ்ச்சிக்கும் இடையில் எவ்வளவு நாள் சென்றிருக்குமோ எனில் ஏறக்குறைய இரண்டாண்டுகள் என்க. இப்பகுதியில் வீட்டின் முதியோர் தள்ளாமை அடைந்துள்ளனர். குடும்பத் தலைவர்களுக்குத் தம் பிள்ளையின் காதல் உள்ளம் புலனாகிறது,"[10] எனக் கூறுகிறார். இந்தப்பகுதியில் உள்ளத்தாலும் உணர்வாலும் வளர்ச்சியடைந்த தங்கத்தைச் சந்திக்கிறோம். இவள் விருந்தோம்பலிலும் சிறந்தவள். இவள் வீட்டிற்கு வில்லியனூர்ச் செல்வர் மாவரசனாரும், அவர்தம் துணைவியாரும் மகனும், மகளும் விருந்தினராக வருகின்றனர். மாமன் மாமியிடம் இவர்கள் வருகையைத் தெரிவிக்க, நோயினால் நைந்து போயிருக்கும் மாமன் அங்கலாயித்துக் கொள்ளுகிறார்:

. . . . நாணல்

துரும்பென்றும் சொல்லவொன்னா
என்றன் உடம்பை
இரும்பென்றா எண்ணுகிறாய் 11

இருப்பினும் மருமகளுக்கு விருந்தோம்பும் மேன்மைபற்றி எடுத்துரைக்க மறப்பதில்லை. இவரிருக்கும் இடம் தேடி வரும் விருந்தினரிடம் இப்பெருமகனார் தன் கடந்தகால நிகழ்ச்சிகளை நினைவு கூர்கிறார். இளமையில் செய்த வீரதீர சாகசங்கள் போன்று இப்போதும் செய்ய இயலவில்லையே என்ற ஏக்கமே அந்த நினைவுகளில் காணப்படுகின்றது. துறவு வாழ்க்கையைப் பரிகசித்து, இல்லறமே நல்லறம் என வற்புறுத்தி கூறும் இவர், தன்னுடைய இல்லற இன்பம், துணைவி நலம் பற்றி ஒரு வார்த்தை கூட பேசுவதில்லை. இவரது பேச்சுகளில் கண்டனமும், பிரச்சாரத்தன்மையுமே மிகதியாக் காணப்படுகின்றன. இம்முதியவர் கவிஞரின் சிந்தனைகளை வெளிப்படுத்தகிறாரே தவிர, அவரால் முழுமையாக உருவாக்கப்படவில்லை. இவர் 'சினமுடைய' முதியவராகக் காணப்பட்ட போதிலும், ஓரளவு சூழ்நிலை இசைவு உடையவராகவும் மனப் பக்குவமுடையவராகவு,ம் தோன்றுகிறார். "நெடுந்தூக்கம் சாக்காடும் இன்பம்"[12] எனக் கூறும் இவருக்கு இறப்பைப் பற்றிய அச்சம் இருப்பதற்கு வாய்ப்பில்லை. இவருடைய இளமை வாழ்க்கையில் ஒரு பகுதி மட்டுமே நமக்குத் தெரிவதால், இவருடைய முதுமையைப் பற்றியும் ஆளுமை வளர்ச்சி பற்றியும் அறுதியிட்டுக கூற முடியாது. இருந்தபோதிலும், மணவழகரின் முதுமையும், அவரது தந்தையாரின் முதுமையும் ஒரே மாதிரியானதில்லையென்று உறுதியாகச் சொல்லலாம்.

குடும்ப விளக்கின் மூன்றாம் பகுதியாக 'திருமணம்' மலர்கிறது. இதில் தங்கத்திற்குப் பதவி உயர்வு - 'மாமி' என்ற உயர்வு கிடைக்கிறது. மணவழகர் - மாவரசர் குடும்பங்களிடையே தோன்றும் சிறு சச்சரவு, புத்திக்கூர்மையும் செயல்திறனும் கொண்ட குப்பத்துப் பெருமாள் தாத்தாவினால் நீங்குகிறது. இந்தத் தாத்தா வேடப்பன் அவர்கள் நகைமுத்தின்

காதலை 'அறியாமல்' அறிந்து கொண்டவர். இவர்கள் களவொழுக்கத்தைச் சிறிது தூரத்திலிருந்து பார்த்துவிட்டு, மிகப் பூடகமாகச் சொல்வார்:

செவ்வாழைதனில் இரண்டு
சிற்றணில் நெருங்கக் கண்டேன்
இவ்விரண்டகன்ற பின்னர்
வந்தேன் நான் 13

பெற்றோரின் பிணக்கினால் இக்காதலர்கள் இணைவது தடைபடக் கூடாது என்று உணரும் இப்பெரியோர், இவர்களைச் சேர்த்து வைப்பது தம் கடமையென எண்ணி மணவழகர் தங்கத்திடம் தான் கண்ட காட்சியைச் சுவைபட எடுத்துரைத்து ஒரு அருமையான நாடகத்தையே நடத்திவிடுகிறார்.

பாவையவள், வேடப்பன்
பார்க்க உலவியதும்
மெத்தையைத் தூக்கி வந்து
தாழ விரித்ததுவும்
முத்துச் சிரிப்பை
முகத்தில் பரப்பியதும்
வேடப்பன் தூங்குவது
போல விழிமூடி
ஆடுமயில் வந்தால்
அழகைப் பருகியதும்
எவ்வாறுரைப்பேன்
யானோர் கவிஞனல்லேன்.14

என்று சொல்லி,. "துடிக்கும் இளமைநிலை என்னாகும்?" எனக் கேள்வியைத் தொடுத்து, விரைவில் அவர்கள் மணத்தை முடித்தல் வேண்டும் என வற்புறுத்துகிறார். மாவரசரைச் சந்தித்து , அவரையும் வேடப்பன் - நகைமுத்து திருமணத்திற்கு ஒப்ப வைத்ததையும் நாடக பாணியில் விவரிக்கும் இவர், ஒரு வாலிப - முதியவர் எனக் கூறலாம். பெருமாள் தாத்தாவும் முழுமையான

படைப்பு அல்ல. இருந்தபோதிலும் அவர் மூப்பின் ஆதிக்கத்திற்கு உட்படாதவர். மகிழ்ச்சியான பதட்டமில்லாத உள்ளம் படைத்தவர், சேவை மனப்பான்மை கொண்டவர் என்பதைக் கவிஞர் எளிதில் புரிய வைக்கிறார். நடந்து முடிந்த நிகழ்ச்சிகளைச் சுவைபட நடத்திக் காட்டுவது பெருமாள் தாத்தாவின் தனித்தன்மை. இத்தகையை முதியவர்கள், எப்போதும் முதுமைத் தன்மையே அடைவதில்லை. இவர் எரிக்சனின் 'முதிர்ச்சியானவர்' வகையைச் சார்ந்தவர்.

குடும்ப விளக்கின் நான்காம் பகுதி மிகப் பொருத்தமாக 'மக்கட்பேறு' ஆக உருவெடுக்கிறது. தங்கத்திற்கு மற்றுமோர் பதவி உயர்வு - பாட்டி என்கிற உயர்வு. தன்னுடைய பேரக் குழந்தைகளைக் கொஞ்சி மகிழும் தங்கம் தான் மூப்படைவதை உணர்கிறாள்.

> தங்கமும் தனது தலைமுடி நோக்குவாள்
> "நரைப்பது தெரியாது நரைக்கின்றது முடி"
> என்று தனக்குள் இயம்புகிறாள்.15

மூப்படைத்துள்ள இந்த மூதாட்டியும் இவள் கணவரும் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதைச் சொல்லுவதே குடும்ப விளக்கின் ஐந்தாம் பகுதியான 'முதியோர் காதல்' ஆகும்.

தங்கத்தைப் போன்றே, அவள் மருமகள் நகைமுத்துவும் தன் மாமன் - மாமி "வேண்டுவதறிந்தே அன்னார்/ வாடுதல் சிறிதும் இன்றி / வாய்ப்புறுத் தொண்டு செய்வாள்."[16] முதுமை எய்திய மணவழகர் - தங்கம் தம்பதியினர் தலைக்கடை அறைக்குள்ளும் நிறைந்த வாழ்க்கை நடத்துகின்றனர். மூப்பின் காரணமாக இவர்கள் உடல் சுருங்கிப் போனாலும், மனம் சுருங்கிப் போகவில்லை. இவர்கள் வாழும் அச்சிறிய அறையே பெரும் பேறு பெற்றது என்று கவிஞர் கூறுவார் இப் பெரியோர்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்து முடித்தவர்கள் . வாய்மை, சுற்றத்தார் நலன் , பிறர்க்குச் சேவை, நன்றி மறவாமை ஆகிய நற்பண்புகளை வாழ்க்கை நெறியாகக் கடைபிடித்து, இந்நாட்டின் நலனுக்காக நல்லறம்

நடத்தி வந்தவர்கள் . தன்னுடைய சென்ற வாழ்க்கையைப் பகுத்துப் பார்க்கும் முதியவர் மணவழகர், தன் மனநிறைவிற்குக் காரணம் தன் இல்லாள் தங்கம்தான் எனக் கூறுகிறார். இவளே அவருள் நிரம்பியிருக்கிறாள். நைந்துபோன இம்மூதாட்டி மணவழகருக்கு எவ்விதம் இன்பம் நல்குவாள்? அவர் கூறுகிறார்:

புதுமலர் அல்ல; காய்ந்த
புற்கட்டே அவள் உடம்பு;
சதிராடும் நடையாள் அல்லள்;
தள்ளாடி விழும் மூதாட்டி!
மதியல்ல முகம் அவட்கு
வறள்நிலம் ; குழிகள் கண்கள் !
எது எனக்கின்பம் நல்கும்!
"இருக்கின்றாள்" என்பதொன்றே[17]

தங்கத்தின் 'அன்புள்ளம் காணுகின்றேன்/அகத்தின்பம் காணுகின்றேன்," என்று சாற்றும் அவர், பேரர் ,அவளை 'அம்மாயீ' என்றும், மக்கள், 'அன்னாய்' என்று கூப்பிடும் பொழுது இளமையில் தங்கம் தன்னை 'அத்தான்' என அழைத்தபோது பெற்ற அதே இன்பத்தைப் பெறுவதாகக் கூறுகிறார். தங்கமே இவரது உயிர்நிலை, அவள் காதலே, அவரது உயிர்ப்பு.

குடும்ப விளக்கின் முதல் பகுதியிலிருந்தே தங்கத்தின் பண்பாட்டையும், காதல் உள்ளத்தையும் நாம் பார்த்து வந்திருக்கிறோம். உயிர் போல் காத்து வளர்த்த கணவன்பால் கொண்ட நேயமும், அன்பும் மூப்பில் குறையவா போகிறது? அன்று பட்டு மெத்தையில் பாங்குறத் துயின்ற அன்பன், இன்று "நெஞ்ச மெத்தையில் துயிலுகின்றான்" என உவப்போடு கூறுகிறாள். மணவழகர் அவள் "நெஞ்சக் காட்டினில்" உலவுகிறார். அவள் "நெஞ்சத்தில் தேன்மழை" பெய்கிறார். மூப்பினால், கை. கால், செவி ஓய்ந்த போதிலும் "மறவனைச் சுமக்கும்என்றன் , மனமட்டும் ஓய்வில்லை"[18] என்று கூறி, தன் கணவனை ஒரு சிறு குழந்தை போல் காப்பாற்றிய அந்த நாட்களின் நினைவின்பத்தில் ஆழ்கிறாள். இம்முதியவர்கள்

இருவரும். ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் சிறுசிறு சேவைகளில் மகிழ்ச்சி கொள்ளுகிறார்கள். இவர்கள் தனியே விடப்பட்டதாக எண்ணுவதில்லை, தங்கள் சுற்றுச் சூழலைப் புறக்கணிப்பதுமில்லை. தன் மருமகள் நகைமுத்தாளிடம் தன்னிடம் எண்ணெய் இட்டுக்கொள்ள மறுத்த கணவரிடம் தான் செய்த குறும்பைச் சொல்லி, தங்கம் அக்கால நினைப்புகளில் மூழ்கி அகமகிழ்கிறாள்.[19] அதே போன்று மணிமொழியாரிடம் அளவளாவும் மணவழகரும் அந்நாள் நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார். இவருடைய களிப்பு மணிமொழியாரை வியப்படையச் செய்கிறது. "நிலைத்த இன்பம் நேர்ந்ததென்றிரே/ வழுத்துவீர் அதை," எனக் கேட்கும் தோழருக்கு, மணவழகர் பதில் அளிக்கிறார்.

செம்மலர் பறிக்கச் செல்வதும் இல்லை நான்!
சேறும்பூசித்திப்பலும் இல்லை,
பற்றில்லை; தீமை உற்றதும் இல்லை,
தீமையில்லாவிடம் இன்பம் திகழும்
என்ன என்னிடம் மீதி என்றால்
ஒன்றே! ஒன்றே! அதன்பெயர் உயிர்ப்பாம்.
அவ்வுயிர்ப்போ அன்பிருப்பதால் இருக்கிறது . . .
என்றான் அன்புக்குரியவர் எவரெனில்
மனைவி, மக்கள் பேரர் உறவினர்
ஆயினும் மனைவி, என் அன்புக்கருகில்
இருப்பவள்; என் மேல் அன் பு வைத்
திருப்பவள் .....20.

அன்பே உயிர்ப்பாகும்: அதிலும், இல்லாளின் அன்பே அனைத்தும் ஆகும். "அவளாலே நல்லொழுக்கம் தவறாமை காத்தேன்/அவளாலே என் குடும்பம் மாசிலதாய்ச் சற்றும்/ கவலையிலாதாயிற்று" எனக் கூறும் இவர் வாயிலாகப் பெண்ணின் ஏற்றத்தை எடுத்துரைக்கிறார் கவிஞர்.[21] தளர்ந்து நலிந்து போன உங்களுக்கு இன்பம் எது என்ற மணிமொழியார் கேள்விக்கு வாய்விட்டு உடல் குலுங்கச் சிரித்துமணவழகர் பதில் சொல்லுகிறார்.

வாய்மூக்குக் கண்காது மெய்வாடினாலும்
மனைவிக்கும் என்றனுக்கும் மணமுண்டு கண்டீர்
தூய்மையுறும் அவ்விரண்டு மனம் கொள்ளும் இன்பம்
துடுக்குடைய இளையோரும் படைத்திடுதல் இல்லை...
அருவியெலாம் தென்பாங்கு பாடுகின்ற பொதிகை
அசை தென்றல் குளிர் வீசும் சந்தனச் சோலைக்குள்
திரிகின்ற கோடிமயில் யாமிரண்டு பேரும்!
தெவிட்டாது காதல் நுகர் செந்தேன் சிட்டுக்கள்
பெருந்தென்னங் கீற்றினிலே இருந்தாடும் கிளிகள்:
பெண் இவளோ ஆண்நானோ என வேறு வேறாய்ப்
பிரித்துணர மாட்டாது பிசைந்த கூட்டமிழ்து![22]

தங்களது வாழ்க்கையே ஒரு அழகிய கவிதை,இரண்டறக் கலந்த தங்கள் காதலே சாகாவரமளிக்கும் இன்னமுது என்று இயம்பும் இவர் பேச்சைக் கேட்டு, அன்றுபோல் இன்றும் தங்கம் நாணமுறுகிறாள். இவர்கள் இளமையில், "சொல்லரிதாய், இனிதினிதாய் நாழிகை"[23] போயிற்று. அவ்வாறே, முதுமையிலும், இனிதாய் நாழிகை கழிகிறது. அயர்ந்து தூங்குவதை இருவர் மனமும் விரும்புகின்றன. "தூங்குவோம்! நிலைத்த இன்பம் துய்ப்போம் நாம் என்றார்.[24]" என்று பாரதிதாசன் முதுமைக் காதலை ஒரு முழுமைக் காதலாக முடிக்கிறார்.

"முதியோர் காதலின் சித்திரிப்பு இப்படி இருக்கிறது என்பதோடு இப்படி இருக்க வேண்டும் என்பதையும் சேர்த்துக் காட்டுகிறது. அன்புப் பிணைப்பான உடலுணர்ச்சி அடங்கி, அதே அன்புப் பிணைப்பான மனவுணர்ச்சி மேலோங்கி, அந்த முதிய கிழவனும் கிழவியும் கேலியும் கும்மாளமும் கொண்டு வாழ்வது புதிய நடப்பியல் கற்பனை என்பதில் சந்தேகம் இல்லை"[25] என சி. கனகசபாபதி திறனாய்வுத் தீர்ப்பளிக்கிறார். முதியவர்கள் காதல் புதிய நடப்பியல் கற்பனை என்ற போதிலும் மூப்பியலாளரின் கொள்கைகளுக்கு ஏற்றவாறு அமைந்திருப்பது 'முதியோர் காதலின்' பெருஞ்சிறப்பு. அதோடு, சூழ்நிலை இசைவே நிறைவான ஆளுமை வளர்ச்சியைத் தரும் என்பதற்கு மணவழகர் தங்கம் தம்பதியர் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. இம்

முதியவர்களின் காதலை முழுமையாக அறிந்துகொள்வதற்கு, மணவழகரின் பெற்றோர்களும், பெருமாள் தாத்தாவும் பெரிதும் உதவுகிறார்கள். எல்லாவற்றிக்கும் மேலாக, கூட்டுக் குடும்ப வாழ்க்கை, ஒரு மனிதனின் ஆளுமையைச் சிறந்த முறையில் வளர்க்க உதவி செய்யும் என்பதும் குடும்ப விளக்கின் மூலம் தெளிவாகிறது. மூப்பில் வரும் தாழ்வுணர்ச்சி, வேதனை, எரிச்சல் ஆகியவற்றை, கடந்த கால நினைவுகள், எண்ணங்கள், சிறு சிறு நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து, ஒரு சரியீட்டுக் கணக்கை (Balance Sheet) உண்டாக்கிக் கொள்வதன் மூலம் மூப்பின் வெறுமையை வெல்லலாம்[26] என ஃப்ரெங்கல்ப்ரன்ஸ்விக் என்ற மூப்பியலாளர் கருத்துத் தெரிவிக்கிறார். மணவழகர் - தங்கம் தம்பதியர் இதையே செய்கிறார்கள்.

மூப்பையும், முதியவர்களையும் கருப்பொருளாக வைத்து எலிஸபெத் ஜென்னிங்ஸ், யேட்ஸ் போன்ற ஆங்கிலக் கவிஞர்கள் பல அழகான கவிதைகளைப் படைத்திருக்கிறார்கள். ஆனால், 'முதியோர் காதல்' என்பது ஒரு புதுமை. ராபர்ட் ப்ரௌனிங் என்ற பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆங்கிலக் கவிஞர், தனது கனப்படியின் அருகில் (By the Fire Side)[27] என்ற கவிதையில் முதுமைக் காதலைப் பற்றிப்பேசுகிறார். இளைஞரான இவர், தன்னுடைய முதுமைக் காதல் எவ்வாறிருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்பதே இக் கவிதையின் சுவராசியமான அம்சமாகும். பாரதிதர்சனைப் போன்றே, முதுமையில் முழுமையை எவ்வாறு பெற முடியுமென்று சிந்தித்துப் பார்க்க முடிகிறது. மணவழகர் - தங்கம் போன்றவரது மூப்பு வாழ்க்கை போல், தனது மூப்பு வாழ்க்கையும் அமைய வேண்டும் என்கிற விருப்பமுள்ள ஒரு இளைஞனையே நாம் ப்ரௌனிங்கில் பார்க்கிறோம்.

குறிப்புகள்

1. குடும்ப விளக்கு, 3, 4, 5 பகுதிகள் (புதுச் சேரி: பாரதிதாசன் பதிப்பகம், 1973)

2. Marguerite D. Kermis, THE PSYCHOLOGY OF HU MAN AGING (Boston : Allyn & Bacon, Inc., 1984) P.66

3. Ibid, PP. 68 - 69

4. Ibid, PP. 69 - 70

5. Ibid, PP. 236 - 7.

6. குடும்ப விளக்கு, முதற்பகுதியும், இரண்டாம் பகுதியும் (ஒன் ப தாம் பதிப்பு, சென்னை : பாரி நிலையம்), ப. 3.

7. குடும்ப விளக்கு, I, ப. 5.

8. கு.வி, I ப.30

9. கு.வி, I ப. 31

10. கு.வி, II ப.35

11. கு.வி, II ப. 41

12. கு.வி, II ப. 69

13. கு.வி, III ப. 15

14. கு.வி, III பக். 25 - 26

15. கு.வி, IV ப. 103

16. கு.வி, V ப. 107

17. கு.வி, V ப. 111

18. கு.வி, V பக். 115 - 116.

19. கு.வி, V பக். 121 - 122

20. கு.வி, V பக். 127 - 28

21. கு.வி, V பக். 131 , 32

22. கு.வி, V ப. 134

23. கு.வி, I ப. 32

24. கு.வி, V ப. 138.

25. பாரதி பாரதிதாசன் கவிதை மதிப்பீடு (சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 1979) பக். 279 - 80.

26. THE PSYCHOLOGY OF HUMAN AGING, P. 224.

27. THE POEMS AND PLAYS OF ROBERT BROWNING (New York The Modern Library, 1961) PP . 55 - 68.

இதனை மறுப்பார் உண்டோ?

எஸ். வெள்ளைச்சாமி,
அட்வகேட்,
திருமங்கலம்.

தென்னாட்டைப் பொறுத்தவரை குறிப்பாக தமிழகத்தைப் பொறுத்து சைவத்தைக் காட்டிலும் வைணவமே முதன்மையானது, பழமையானது.

காரணங்கள்:

1. இடம்:

அ) சிவனுக்கு இருப்பிடம் கைலாயம்.
பெருமாளுக்கு வட வேங்கடம்.

ஆ) 1008 சிவாலயங்களில் பெரும்பகுதி வட நாட்டில்
108 திருப்பதிகளில் பெரும் பகுதி தென்னாட்டில்
குறிப்பாக தமிழகத்தில்.

2. நிறம்:

சிவன் சிவனைச் சேர்ந்தவர்களின் நிறம் சிவப்பு, வெள்ளை. அவனுக்கு மறுபெயர் வெள்ளைச்சாமி.

பெருமாள் நிறம் கருப்பு. கருப்புச்சாமி.
"அங்காளின் கண்டமைந்த
அழகமைந்த மேனியான்
முற்காணும் திரு நெடுந்தோள்
மழைகாணும் மனி நிறத்தோன்"
கருப்புச்சாமி - பெருமாள்

3. மொழி ;

சைவத் திருமறைகளில் பெரும்பாலும் வடமொழி கலப்பு உண்டு. வைணவ நூல்கள் தனித் தமிழ் சிறப்புடையவை. குறிப்பாக மூத்த நூலான நாலாயிரத் திவ்யபிரபந்தத்திற்கு "திராவிட நூல்" என்ற பெயர் உண்டு. பழக்கத்தில் உள்ள சொற்கள் 'தேங்குழல்' 'அக்கார அடிசல்' 'திருமண்'. தொல்காப்பியத்திற்கு முன்னது அகத்தியம் என்பர். அகத்தியம் கிடையவே கிடையாது. கற்பனை. சைவத்தின் ஏமாற்று வித்தை.

4. இயல்பு :

வெளியூரான் உள்ளூர்க்காரனை அண்டி அவன் பழக்க வழக்கம். ஏன்? பெயர்களைக் கூட ஏற்றுக் கொள்வான். உள்ளூர்க்காரன் தனித்தன்மையுடன் விளங்குவான். சைவன் 'ராமகிருஷ்ண அய்யர்' என்ற பெயரை ஏற்றுக் கொள்வான். வைணவன் 'பரமசிவ அய்யங்கார் ' என்று செத்தாலும் அழைத்துக் கொள்வதில்லை.

5. பெருமாள் கோவில்களில் 'சிவ' உருவங்களுக்கு இடம் இல்லை. ஆனால், சிவன் பிரகாரங்களில் பெருமாளுக்கு நிச்சயம் இடம் உண்டு. ஒரு கருப்பசாமியாவது இருப்பார்.(உ.ம்) திருப்பரங்குன்றம்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சாமி சன்னதின்கு வடக்கில் 'கிடந்த பெருமாள்' சன்னதி இருந்தது. தற்சமயம் வைணவர்கள் ஏமாளித்தனத்தால் திருக்கல்யான மண்டபமாக இருக்கிறது. ஆனால் இன்னும் தூண் சிற்பங்கள் வைணவ சம்பிரதாய உருவங்களே உள்ளன. சைவர்கள் அவற்றை மாற்றலாம். வைணவர்களே 'ஜாக்கிரதை'.

ஏற்கனவே ஏமாந்துள்ளீர்கள் என்பதற்கு இன்னும் ஒரு எடுத்துக்காட்டு. திருக்குற்றாலத்தில் குற்றால

நாதர் கோவிலில் ஏற்கனவே இருந்த பெருமாள் தம்பதியரை உள்ளடக்கிவிட்டுத்தான் அதன் மேலே சிவ உருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

6. தாழ்வு மனப்பான்மை :

"தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவருக்கும் இறைவா போற்றி"

வெளியுரானுக்கு இந்த தாழ்வு மனப்பான்மையுண்டு

7. கலாச்சாரம் :

அ) மீனாட்சி பெருமாளின் தங்கை.
சீதேவி சிவனின் சகோதரி அல்ல.

ஆ) வைகையாற்றிற்குத் தெற்கே மீனாட்சி அம்மன் கோவில் திருவிழா, உள்ளூர்காரர்கள் அதிலும் மேட்டுக்குடி மக்கள் ஆர்ப்பாட்டம்.

ஆனால், ஆற்றுக்கு வடக்கே எதிர் சேவையிலிருந்து ஜாதி, மதம், ஏழை, பணக்காரர், ஏன்ற எந்த வேறுபாடும் இல்லை. 'அழகன்' மதுரையைச் சுற்றியுள்ள எல்லா பெருமாள் கோவில்களுக்கும் மதுரையில் மண்டகப்படி. இன்னும் எத்தனை, எத்தனையோ!.

சமயம் வரும்போது அவிழ்ப்போம்.

வளமுடன் வாழ்க **ஜெய்ஜெய்** செழிப்புடன் வாழ்க

பிரியங்கா பெனிபிட் பண்ட்ஸ் லிமிடெட்

3B, AA ரோடு, ஞானஒளிவுபுரம், மதுரை-625010, போன்:604717

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட
நிதி நிறுவனம்

PRENKA

பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

23% 5 வருடங்கள் ரூ.50,000/= அதற்குமேலும்

பிரியங்கா பாண்டு		
முதலீடு	காலம்	பெறும்தொகை
ரூ 25,000	120 மாதம்	ரூ.1,00,000

அக்க்ஷயா திட்டம்	விஜயதசமி திட்டம்			லெக்ஷ்மி குவியல் திட்டம்			மீனாட்சி திட்டம்	
ரூ.2000 செலுத்துவீர் 250 மாத நிறைவில் ரூ.70000 பெறுவீவீர்	டிபாசிட்	காலம்	வருவாய்	டிபாசிட்	காலம்	வருவாய்	உங்கள் தொகை 48 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்	
	ரூ 7,500 9,000	16 வருடம்	ரூ மாதா 1,20,000 1,50,000	ரூ.100 மாதா மாதம்	20 வருடம்	ரூ. 1,00,000	டிபாசிட் 48 மாதம்	ரூ ரூ 5000-10000 10000-20000

பிறந்தநாள் பரிசுதிட்டம்	உங்கள் பிறந்தநாள் அன்று ரூ.1000/- வீதம் வருடம் 1க்கு தொடர்ந்து 5 வருடங்கள் செலுத்தினால் 6வது வருடத்திலிருந்து உங்கள்வாழ்நாள் முழுதும் உங்கள் பிறந்தநாளன்று ரூ.1000/- கிடைக்கும்.

தங்க நகை கடன்	தங்க நகை கடன் கிராம் 1க்கு ரூ.250, வழங்கப்படும். வீடு கட்ட கடன் வசதி வழங்கப்படும்.

பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு

SAFE DEPOSIT LOCKER FACILITY

சேமிப்பு திட்டம் 10% PA.

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்,

மதுரை.

மருத்துவ மனையின் சிறப்பு சேவைகள்

1. அறுவைச் சிகிச்சை மற்றும் இரப்பை, குடல் நோய் மருத்துவம்.
2. சிறுநீரகவியல் அறுவைச் சிகிச்சை லித்தோட்ரிப்ஸி (சிறுநீரகக் கல் உடைப்புப் பிரிவு)
3. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை
4. செயற்கை சிறுநீரகச் சிகிச்சை டயாலிஸிஸ்.
5. பொது மருத்துவம் மற்றும் தீவிர இருதயச் சிகிச்சை மற்றும் இருதய அறுவைச் சிகிச்சை.
6. நரம்பியல் மற்றும் நரம்பியல் அறுவைச் சிகிச்சை.
7. மகளிர் நலம் மற்றும் மகப்பேறு மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை.
8. குழந்தையின்மை மற்றும் மலட்டுத்தன்மை சிகிச்சை.
9. குழந்தைகள் நல மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை.
10. 24 மணி நேரமும் செயல்படும் [illegible] சிகிச்சைப் பிரிவு, எலும்பியல் அறுவைச் சிகிச்சை.
11. அங்க சீரமைப்புச் சிகிச்சை மற்றும் அழகு சிகிச்சை மருத்துவம். (பிளாஸ்டிக் சர்ஜரி).
12. பல் நோய் மருத்துவப் பிரிவு.
13. தோல் நோய் மற்றும் பால்வினை நோய் மருத்துவப் பிரிவு.
14. காது, மூக்கு, தொண்டை மற்றும், தலை கழுத்து அறுவைச் சிகிச்சை
15. அனைத்து வகையான எண்டாஸ்கோப் மற்றும் லேப்ராஸ்கோப் முறையான சிகிச்சை.
16. மயக்க இயல் மற்றும் செயற்கை சுவாசப் பிரிவு.
17. கண் மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை.
18. சர்க்கரை நோய் மருத்துவம்.
19. அலர்ஜி மற்றும் ஆஸ்துமா மருத்துவம்.
20. முதியோர் நல மருத்துவம்.
21. மன நல மருத்துவம்.
22. புற்று நோய் அறுவைச் சிகிச்சை கதிர்வீச்சு சிகிச்சை, மருத்துவ சிகிச்சை.
23. இரத்த இயல் துறை.
24. [illegible]த்த வங்கி.
25. [illegible]வாரண மருத்துவம்.
26. ஆயுர்வேத, சித்த, ஹோமியோ, யுனானி, மருத்துவம்.
27. உலக தரத்திற்கு நிகரான 24 மணி நேர பரிசோதனை நிலையம்.

ஸ்கேன் மற்றும் நுண்கதிர் பரிசோதனை

மற்றும் சிறப்பு வசதிகள்

NMHRC

- மீனாட்சி ஹெல்த் கார்டு
- மெடிக்களைம்
- மாஸ்டர் ஹெல்த் செக்கப்.
- முழு உடல் பரிசோதனை.
- இருதய பரிசோதனை
- குடும்ப மருத்துவர் திட்டம்.
- அஞ்சல் வழியில் மருத்துவ ஆலோசனை

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

மீனாட்சி மிஷன் மருத்துவமனைமற்றும் ஆராய்ச்சி நிலையம்,

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை - 625 107.

அச்சிட்டோர் : **FONTS, 93, North Masi St., Madurai - 1.**